185

ஜகன்மோகினி

ஆசிரியை

வை.மு.கோதைநாயகி அம்மாள்

Ic
௯௨11,N22JM
M36.13.10.
182994.

வருஷசந்தா ரூ1/8
தனிகாபி அ2ணா

"ஜகன்மோகினி" ஆபீஸ்
28, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

மலர் 13
இதழ் 10

ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு ஆரம்பம்	மாதாந்த நாவல் சஞ்சிகை.	ஜனவரி 1936.

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8	ஜீவிய சந்தா ரூ. 25	தனிப் பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப் படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	இனாமாக நாவல்கள் வேண்டுமா ?	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பண மனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனா	ஒன்று இனாம்	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி

வெளிவந்து விட்டது

அனாதைப் பெண்

(பல அழகிய படங்களுடன் கூடியது)



[ஆதி காலத்திய நினைவுகள் சினிமாப் படம் போன்று கண் முன்பு சுழன்று செல்கின்றன. வாய் திறக்க முடியவில்லை. பொங்கி வரும் உணர்ச்சி வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்க முடியவில்லை. பித்தன் போலாகி...... இந்திராவின் ஆயுள் காலத்தில் இதுபரியந்தம் கண்டிராத பேரானந்தமும் சந்தோஷமும், பக்கத்திலேயே விசனமும் பொங்கிக் கொந்தளிக்கின்றன.]

"உனது பரந்த அன்பு மயமான இருதயத்தில் இந்த அனாதைப் பெண்ணின் நினைவு மட்டும் ஒரு மூலையில் இருந்தால் போதும்".

இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.

ஆரம்பம் முதல் கடைசி வரையில் ஓயாச் சிரிப்பை உண்டாக்கும் 15 சிறு கதைகள் அடங்கிய

பக்ஷமாலிகா

(பல அழகிய படங்களுடன் கூடியது)

விலை அணா 6

பல வருஷங்களாகக் கைவசமில்லாது இப்பொழுதே அச்சாகி வெளிவந்துள்ள அற்புதமான

மூன்று நாவல்கள்

ரூ 5 முன்பணமனுப்பினால் மூன்று நாவல்களையும் அனுப்புகிறோம்.

காதலின் கனி (2-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

இப்பெயருக்கேற்றவாறு ஒப்புயர்வற்ற காதல் ரசமும் அடங்காப் பிடாரியான மனைவியிடம் அகப்பட்டுக் கொண்டு சாதுவான புருஷன் படும் பாடும், குடுகுடுப்பாண்டி, மந்திரவாதி முதலியவர்களிடம் பாமர ஜனங்கள் அகப்பட்டுக் கொள்வதும் புதையல் எடுக்கும் விநோதமும் புதுமாதிரியான வழியில் துப்பறியும் ஆச்சரியமும் நிறைந்தது.

சாருலோசனா (3-ம் பதிப்பு) விலை. ரூ. 2-8

உண்மைக் காதலின் மகிமையை யறியாது பேராசைப் பிடித்த கிழவர்களுக்கு பண ஆசையினால் தம் மக்களைக் கொடுத்துப் பெற்றோர்கள் அடையும் பாபமும், பெண்மக்கள் படித்த திமிரினால் கட்டிய கணவனை மதியாது தலைகால் தெரியாமல் சுயேச்சையாகக் கெட்டழிந்து பரிபவப்படுவதும் இன்னும் மனத்தை யுருக்கும் சம்பவங்களும் நிறைந்த, சமூக ஊழல்களை விளக்கிக் காட்டும் அதியற்புதமான நாவல்.

ராதாமணி (3-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

கணவனின் நிழல் போலுள்ள உத்தம மனைவியின் வாழ்க்கையும், உயர்ந்த காதலர்களின் மாட்சிமையும் விலைமகளாகப் பிறந்தும் விலையற்ற குணத்தினால் பெருமையுற்று விளங்கும் அம்புஜத்தின் அருமையான ஜீவியமும், விலைமகளின் லீலையால் அன்யோன்ய தம்பதிகளின் சிதறலும் நேரில் விஷயமறியாது பிறர் சொல்லைக் கேட்டுச் சந்தேகிப்பதால் விளையும் தீமையும் இன்னும் அளவிலாத அநேக சாரங்களைக் கொண்ட துப்பறியும் நாவல்.

"ஜகன்மோகினி" ஆபீஸ் திருவல்லிக்கேணி, சென்னை.

விதி செய்யும் வைபவம்

“அனாதைப் பெண்” நாவலில் மற்றொரு காட்சி

இந்திரா வண்டியை நிறுத்திவிட்டுப் பின்புறமாகவே நின்று பத்திரிக்கையை உற்றுக் கவனித்தாள்..............அவளுடைய உள்ளத்தில் ஒரு மின்னல் போன்ற மகிழ்ச்சி மயமான உணர்ச்சி பளிச்சென்று தோன்றி மறைந்தது.......விதி செய்யும் கூற்றை அவள் அறிவாளா ?

விலை ரூ 1—4—0 : சந்தா நேயர்கட்க்கு ரூ. 1

முன் பணமனுப்பி பெற்றுக்கொள்ளவும்

பத்திரிகை உலகில்
இதுவரை நடைபெறாத சம்பவம்!
எமது நன்றியறிதல்

சந்தா நேயர்கள் தயவு செய்து கவனமாகப் படிக்கவும்

10-வதாண்டு முதல் (காதலின் கனி ஆரம்பத்திலிருந்து) நமது "ஜகன்மோகினி"யை ஐந்து வருஷங்கள் தொடர்ச்சியாக ஆதரிக்கும்சந்தா நேயர்களுக்கு எமது நன்றியறிதலின்ஞாபகார்த்தமாக

முழு விலை ரூ. 2 - பெறுமான எமது நாவல்களை இனாமாக அளிக்கத் தீர்மானித்துள்ளோம்

இம்மாதிரியே இனிமேல் ஒவ்வொரு ஆண்டிலும் அளிக்க ஏற்பாடு செய்துள்ளதால் நமது நேயர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சந்தாதாரர்களாக இருப்பதன் அநுகூலத்தை அறிவார்களென்று நம்புகிறோம்.

கடந்த நான்கு வருடங்களாகச் சந்தாதாரராயிருப்பவர்கள், 14-வது ஆண்டின் சந்தாவை அனுப்பி 5- வருடங்கள் சேர்ந்தார்ப்போல ஆதரிப்பதுடன் 1935 வரையில் வெளியான நமது நாவல்களில் அவர்களுக்கு வேண்டியதைத் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: தபாற்செலவுக்காக நான்கணா சேர்த்து அனுப்பவும்.

சந்தா அனுப்பும் போது உங்களது சந்தா நம்பரை அவசியம் எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி. சென்னை

அவளுடைய ஆழமான அன்பின் முதிர்ச்சியினல் கூறிய வார்த்தைகளேயும் அவளுடைய உணர்ச்சியையுங் கண்ட ஏகாம்பரம் ராஜத்தின் கையைப் பிடித்துக்கொண்டு "செல்வி! நிமிடத்திற்கு நிமிடம் உன்னிடம் என்னே மீறிய அன்பு சுரப்பதன் காரணமே தெரியவில்லே. எனக்கு இருந்த ஒரே ஒரு சகோதரி அதிபாலியத்தில் இறந்துவிட்டாள். அவள் மறைந்து பல வருடங்களும் ஆய் விட்டன. அந்த உருவத்தின் நினேவும் அன்பும் உன்னேக் காணும் போதெல்லாம் தோன்றி என்னே ஏதோ செய்கிறது.

ராஜம்! நீ அனுவசியமாய் உயிரை விடுவதென்ற எண்ணத்தை மறந்து விடு. என்னல் கூடியவரையில் கடைசீமட்டும் ஒரு கை பார்த்துவிடுகிறேன். பிறகு கடவுள் விட்ட வழியாகிறது. எத்தனேயோ கேஸ்களில் மரண தண்டனே விதித்துத் தூக்கிலிடுவதற்கு முதல் நாள் தப்பியதும் உண்டு. ஆகையினல் நீ சற்று பொறுமையாயிரு. அவசரப்படாதே. நீ அவசரப்பட்டு ஏதேனும் செய்து விட்ட பின்னர் காரியமே பாழாகிவிடும். அதன் பிறகு அவன் தப்பிப் பிழைத்தும் ப்ரயோஜனமில்லே. ஆகையினல் ஜாக்ரதை" என்று அன்போடு கூறினர்.

ராஜம்:—ஐயா! தசங்கள் சொல்லியபடியே நடக்கச் சித்தமாகவிருக்கிறேன். குருடன் கண்ணே வேண்டுமென்று கேட்பானேயன்றி வேண்டாமென்று கூறமாட்டானல்லவா? அப்படியே நான் என் அன்பான மோஹனனின் உயிரைத்தான் வேண்டுகிறேன். எனக்கு அது கிடைத்தால் போதும். தாங்கள் என்னுயிரைத் தடைசெய்கிறீர்கள். அதே உயிரைத் தாங்கள்தான் காக்கவேண்டும்" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

ஏகாம்பரமும் அவளுக்குத் தேறுதல்கள் கூறிவிட்டு விடைபெற்றுச் செல்கையில் அவ் வறையின் பக்கத்து ஹாலில் கிருஷ்ணன் கடுகடுத்த பார்வையுடன் நின்றிருந்தான். அவன் ஏகாம்பரத்தை விரைக்க விரைக்கப் பார்த்த பார்வையின் கருத்தை யறிந்த ஏகாம்பரம் பதிலே பேசாது போய்விட்டார்.

கிருஷ்ணன் கோபக்கனே ஜ்வலிக்க தடதடவென்று உள்ளே வந்தான். ராஜம் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள். அவளே நோக்கி "ராஜம்!...பேஷ்...வர வர உன் புத்தி இம்மாதிரி மங்கி பாழாகிக்கொண்டு வருவதைக் காண எனக்குப் பற்றி எரிகிறது. இதைக் கண்ட பிறர்தான் என்ன நினைப்பார்கள்? கேஸ் விஷயமெல் லாம் முடிந்த பிறகும் இந்த போலீஸ்காரர்களுக்கு என்ன வேலே? இவர்கள் அடிக்கடி இளங் குமரியாகிய உன்னுடன் வந்து தனியே பேசவேண்டிய காரணமென்ன? இது மிகவும் வெறுக்கத்தக்க விஷயம். உன்னே மணக்கப்போகும் மனிதன் இந்த ஊழலேக் கண் டால் என்ன நினைப்பான்?'' என்று கூறுகையில்

ராஜம் ஆத்திரத்துடன் "என்ன! என்ன!! என்னே மணக்கப் போகும் மனிதனு! அது யாரப்பா! நீ எந்த மாப்பிள்ளேயைத் தேடி வைத்திருக்கிருய்? ... போதும்! ... போதும் ... நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். என் ஜோலிக்கு நீ வராதே...போய்விடு... வீணுன மனஸ்தாபத்திற்கு இடங்கொடுக்காதே...உன்னுடைய சக வாஸமும், ஊழலும், குதிரைப் பந்தயமும், சூதாட்டமும் வெகு ஒழுங்காக இருக்கும் வேலேயல்லவா! தர்மலிங்கத்தின் மகன் என்ற பெயரை ப்ரகாசிக்குமல்லவா!...இதைக் கண்ட பிறர் சந்தோஷ ஆர வாரம் செய்வார்களல்லவா?... ஏன் உன் முதுகு உனக்குத் தெரி யாது வீண் சிரமப்படுகிருய்? என்னேப்பற்றி கவலேப்பட நானே போதும். உனக்கு வேண்டாம்.

கிருஷ்ணன் கோபத்துடன் இடை மறுத்து "சீச்சீ! துஷ்டே! அதிகப்ரஸங்கி! ... கண்ட கண்ட தடியன்களுடன் நீ பேசுவதும் குலாவுவதும் வெகு அழகு...உனக்கு மாப்பிள்ளேயை நான் தேட வேண்டாம்...உன் பிதாவே தேடி வைத்துள்ள நாகலிங்கந்தான் காத் திருக்கிருர். இந்த மாதத்திலேயே விவாகத்தை முடித்துவிடவேண்டு மென்று எல்லோரும் ப்ரியப்படுவதால் நான் ஏற்பாடுகள் செய்து வருகிறேன். இனி மேல் இந்த மாதிரி அனுவசியமாக யாரேனும் வீட்டிற்கு வந்தால் நான் கெட்டவனுக இருப்பேன்.

கல்யாணத்தைப்பற்றி உன்னிடம் கூறுவதற்காக நான் வந்த

போது அந்த மனிதன் உன்னோடு ரகஸியம் பேசுவதையும் உன் கையைப் பிடிப்பதையுங் கண்டு கோபமுற்று விலகி நின்றேன். ராஜம்!... நான் முன்பே தெரிவித்தபடி இந்த வீட்டிற்கு நான் அதிகாரி. இந்த சொத்துக்களுக்கு நான் அதிகாரி. நீ என் கீழ்ப்படிந்து இருக்க வேண்டியவள். ஆகையினால் என்னிஷ்டத்தை மீறுவாயானால் நீ படும் பாடு நாயும் படாது. பத்திரம்'' என்று வெகு முடுக்காகக் கூறினன்.

ராஜம்:—சீச்சீ!...அதிகம் வாயைக் கொட்டாதே! இந்த வீட்டுக்கோ சொத்துக்கோ நீ அதிகாரியாக விருக்கலாம். என் சரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் நீ அதிகாரி இல்லை என்பதை மறக்காதே. உன் ப்ரியப்படி நான் ஒருபோதும் நடக்கமாட்டேன். நான் செத்தாலும் சாவேன்; நாகலிங்கத்தை மணக்கமாட்டேன்: இது சத்தியம். ஆதி முதல் என் வாழ்க்கைக்கு வேர்ப்புழுவாகிய அவனை நீ சிபார்சு செய்வதானது குடியன் குழந்தைக்கும் குடியை ஊட்டுவதுபோ லிருக்கிறது. நீ தலைகீழாக நின்றாலும் இக் காரியம் நடக்காது.

பெண்களுக்கும் சொத்துரிமை சட்டப்படி ஏற்பட்டிருக்குமாயின் நீ இந்த மாதிரி தலை துள்ளுவாயா! உன்போன்ற துஷ்ட சகோதரர்களுக்காகவும், துஷ்ட பிதாவுக்காகவுந்தான் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை வேண்டுமென்ற ப்ரசனை இப்போது பலமாகக் கிளம்பி இருக்கிறது...சீச்சீ! அல்பமே! நான் உன் கை விளையாட்டு பொம்மையல்ல; போ வெளியே....

கிரு:—(அபாரமான ஆத்திரத்துடன்) ஆகா! என்ன சொன்னாய்?...அல்பமா...துஷ்டனா....அல்பமும், துஷ்டனும் என்ன செய்வார்கள் தெரியுமா? இதுதான் செய்வார்கள்...என்று கூறிக் கொண்டே தடார் புடாரென்று அடித்து ''என் சொல்படிக் கேட்டால் இங்கு இருக்கலாம்; இல்லையேல் இவ் வீட்டைவிட்டுப் போய் விடு. 'வீட்டைவிட்டு ஓடிவிட்டாள் கெட்டுப்போன கழுதை' என்ற பட்டத்தை வாங்கிக் கட்டிக்கொள்ளு!'' என்று இழுத்துத் தள்ளினன்.

அந்தோ! பாவம், அல்ப அதிகாரமும், எஜமானத்வமும் கையில் சிக்கிவிட்டதன் விபரீதம் உடன்பிறந்தபாசத்தையும்உரிஞ்சி விட்டதல்லவா? அதிகாரமும் கர்வமும் கொண்ட எந்த மனிதர்களின் செய்கையும் இதுதான் போலும்! ஹா! கடவுளே!'' என்று கண்ணீர் வழியக் கதறியவாறு கீழே விழுந்துவிட்டாள்.

20-வது அதிகாரம்

நஞ்சினும் கொடிய நெஞ்சின் கடுமை

ஏகாம்பரம் அங்கிருந்து நேரே கல்யாணியம்மாள் வீட்டுக்குச் சென்றார். கல்யாணியம்மாளுடைய கண்ணின் பாதை நீங்கி கண் நன்றாகத் தெரிய வாரம்பித்தது; எனினும் அவளுக்கு உலகமே இருண்டுவிட்டது போன்ற மன அந்தகாரம் ஏற்பட்டுவிட்டதால் கிழவி உரு மாறிப்போய் பாயும் படுக்கையுமாகிவிட்டாள்.

வீட்டில் குடியிருப்பவர்கள் ஐயோ பாவமென்று அவ்வப்போது கவனிப்பதும், சங்கரனும் மரகதமும் கிழவிக்கு வெகு ப்ரீதியுடன் வந்து உபசரிப்பதுமாக விருக்கிறார்கள். எனினும் கிழவியின் துடிக்கும் ஆத்மாவுக்கு இவைகள் சாந்தியைக் கொடுக்குமா! சதா "மோஹன்! மோஹன்!'' என்று வாய்ப்பிதற்றிக்கொண்டிருக்கிறாள். ஆகாரமும் உட்கொள்வதில்லை. தூக்கு போடும் நாள் நெருங்க நெருங்க கிழவியின் உயிரும் தத்தளிக்கின்றது. ஆகாரத்தை அறவே வெறுத்தாள்.

இன் னிலைமையில் ஏகாம்பரம் அங்கு வந்து கிழவியை நோக்கி "அம்மா! உங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக விருக்கிறது. கடவுள் கிருபையை யாரறியக்கூடும்? என்னாலான உதவியைச் செய்து உங்கள் மகனை விடுக்க எத்தனை ப்ரயத்தனங்கள்

செய்யக்கூடுமோ, அத்தனையும் செய்து பார்த்துவிடுகிறேன். தாங்கள் பகவானை வேண்டி ப்ரார்த்தனை செய்யுங்கள். மோஹனின் பெட்டியை நான் பார்க்கவந்திருக்கிறேன்'' என்றார்.

கல்யாணியம்மாள் உருகிய மனத்துடன் அபாரமான வாஞ்சை பெருக "ஐயா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியவில்லை. தாங்கள் கூறும் வார்த்தைகளால் என் மனம் பரம சந்தோஷமடைகிறது. தங்களையோர் தெய்வமாக மதிக்கிறேன்; நம்புகிறேன். என் மோஹன் பிழைத்துவந்தால் போதும்; என் வயிற்றில் பாலை வார்த்தால் போதும். ஐயா! இதுதான் மோஹனின் பெட்டி'' என்றாள்.

உடனே ஏகாம்பரம் "அம்மா! நான் ஓர் போலீஸ் உத்யோகஸ்தன். நீங்கள் வேறு யாரோவென்று சந்தேகிக்கவேண்டாம்'' என்று கூறியவாறு பெட்டியைத் திறந்தார். பெட்டியின் உள்புறமுள்ள கள்ள அறையில் கடிதம் இருந்தது. அக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தார். பின்னும் பெட்டி முற்றும் பார்த்துவிட்டு அக் கடிதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு கல்யாணியம்மாளிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

தன்னறையில் அந்த கடிதத்தை வைத்துக் கொண்டு அதன் எழுத்தை மிக்க ஊக்கத்துடன் உற்றுப் பார்த்தார். அவ்வளவு சுலபமாக திடீரென்று அக்கடிதத்தில் என்ன தெரிந்து கொள்ள முடியும்? ஏகாம்பரத்தின் மனத்திலோ ராஜத்தின் மனவேகத்தை விட அதிகரித்த ஆத்திரமும் வேதனையும் பாதிக்கின்றன. "இதை எந்த விதம் கண்டு பிடிக்கலாம்?'' என்ற யோசனையுடன் உட்கார்ந்திருந்தார்.

மழை ஜோ வென்று பெய்து கொண்டிருந்ததால் காற்று மிகவும் சிலு சிலுப்பாய் வீசிக் கொண்டிருந்தது. ஆகாயத்திலிருந்து உண்டாகும் இடியின் சப்தமும் மின்னலின் ஒளியும் ஏகாம்பரத்தின் கண்ணைக் கூசியும்,காதை அடைத்தும் வேதனை செய்கின்றன. குளிரும் சிறிது இருந்ததால் ப்ளானல் சட்டை போட்டுக்கொண்டு சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருந்தார்.

அச்சமயம் சாத்தப்பட்டிருந்த கதவிற்கு வெளியில் ஜோவென்ற மழை ஓசையின் நடுவில் ஹீனமான ஓர் குரல் கேட்டது போலத் தோன்றியதும் அதையே உற்றுக் கவனித்தார். ஹீன குரலில் பரிதாப தொனியும், குளிரினல் வெட வெட வென்று நடுக்கும் சப்தமும் ஒன்று கூடி "ஐயா!.........ஐயா! உள்ளே வரலாமா.? கதவைத் திறக்கலாமா......வென்று வந்த ஹீன குரலைக் கேட்டதும் பதை பதைத்தவாறு கதவைத் திறந்து பார்த்தார்; அப்படியே மின்சாரம் தாக்கியதுபோலத் துள்ளினர்.

"ஹா......ராஜம்!......ராஜம்!...... நீயா இங்கு நிற்கிருய்! இதென்ன கோலம்! ஏன் இப்படி மழையில் வந்தாய்?" என்று அன்புடன் அவள் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்ருர். உடனே ஒரு விசையை அழுத்தினர். அவர் மனைவி கற்பகாம்பாள் "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டவாறு வந்தாள்.

ஏகாம்:—கற்பகம்! முதலில் இந்த பெண்ணை அழைத்துச் சென்று ஈராடையை மாற்றி உனது புதிய சேலையைக் கொடுத்து அழைத்து வா......குளிர் நடுக்குகின்றது பாரு—என்ருர்.

உடனே கற்பகம் ராஜத்தைப் பணிவோடு கையைப் பிடித்து அழைத்துச் சென்று தலையை அவிழ்த்துத் துடைத்தவாறு உடை கொடுத்து தணியச் செய்து அழைத்து வந்து உட்கார வைத்து விட்டு உள்ளே சென்று சுடச் சுட ஒரு கோப்பை காப்பி கொண்டு வந்து பலவந்தமாகக் குடிக்கச் செய்தாள்.

ஏகாம் :—கற்பகம்! இந்த பெண்மணிதான் நான் அன்று சொன்னேனே, அவள். பாவம்! இச்சிறுமி படுந் துயரம் கூறத்திற திறமன்று......சரி......நீ உள்ளே போ......அம்மா! ராஜம்......... இதென்ன! இந்த மழையில்......இரவில்......தனிமையாய் ஏன் வந்தாய்? என்ன விசேஷம்......என்று பரிவுடன் கேட்டார்.

அப்போது ராஜத்தின் தேகம் நடுங்கிக்கொண்டே இருக்கிறது. கண்ணீர் பெருக துக்கம் அடைத்த குரலுடன் பேசத் தொடங்கி "ஐயனே!......என்னுடைய விதி என்னை இலேசில்

விடப்போவதில்லை என்று தெரிகிறது. இன்று தாங்கள் சென்ற பிறகு என் சகோதரன் வந்து என்னைக் கண்டவாறு திட்டியதோடு அந்தப் படுபாவி நாகலிங்கத்தை நான் கட்டாயம் மணக்க வேண்டு வென்று வற்புறுத்தினன்.

நான் தாங்கமாட்டாத விசனமும் ஆத்திரமும் அடைந்து ஏதோ பேசிவிட்டேன். அவன் என்னை வற்புறுத்தி,நையப் புடைத்து விட்டு 'என் சொல்படி நடக்காவிட்டால் இனி இவ்வீட்டிலிருக்க லாகாது' என்று கண்டிப்பாய்க் கூறினன். நான் விதியை எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தேன். அவன் ஓர் தாசியைத் தனது சகாக்களி னுடைய பலத்தின் திமிரால் இன்று வீட்டிற்கே அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். அவளை எதிரில் வைத்துக் கொண்டே நாகலிங்கமும் அவனும் என்னை மிரட்டி அதி காரம் செய்து 'அடுத்த வாரம் கல்யாணம் நிச்சயமாகி விட்டது; அன்று செய்தே தீரவேண்டும்.' என்று வற்புறுத்தி னர்கள். "நான் என்னுயிரை விட்டாலும் விடுவேன். இதற்கு இசைய மாட்டேன்'' என்று ஆவேசத்துடன் கூறியதால் அவன் அதிக ஆத்திரங்கொண்டு 'இனி இவ்வீட்டிலிருக்க வேண்டாம்...... ஓடிப்போய் விடு. பெற்ற தந்தையைக் கொன்ற படுபாவியின் மீது நீ மோகங் கொண்டு பிதற்றுவது த்ரோகத்திலும் த்ரோகம்......ஓடிப் போய்விடு..... என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே வீதி வரையில் வந்து தள்ளி விட்டு "கெட்டுப் போன கழுதையே! இனி இப்பக்கம் திரும்பாதே'' என்று கூறி கதவைத் தாளிட்டுக் கொண்டான்.......

என்று கூறும்போது அவளுடைய துக்கம் கரை காணது போய்விட்டது. முகத்தில் கையை வைத்துக்கொண்டு கோவெனக் கதறுகிருள். ஏகாம்பரத்திற்கும் இந்த விஷயத்தினல் ஒரு புறம் ஆத்திரமும், ஒரு புறம் துக்கமும் பொங்கி விட்டன.

ராஜம் மீண்டும் பேசத் தொடங்கி......"நான் எத்தனையோ கெஞ்சியும்,மன்றுடியும் கேட்ட தெல்லாம் அவன் காதிலேயே வாங்க வில்லை. தள்ளிவிட்டுத் ;திட்டிவிட்டுச் சென்ருன். ஐயனே!

என் அன்பான பிதாவைப் போன்ற உங்களிடமல்லாது நான் எங்கு சென்று என் குறையை முறையிடுவேன்! எங்கு சென்று என் காலத்தைக் கடத்துவேன்? என் தலைவிதி இப்படியாகுமென்று நினைக்க வில்லையே! நான் இனி என் செய்வேன்? எனக்கொன்றுமே புலப்படவில்லையே!'' என்று கண்ணீர் பெருக்கிக் கதறினாள்.

ஏகா:—(ராஜத்தின் கையைப் பிடித்துக்கொண்டு) அம்மா! நான் அங்கிருந்து வரும்போதே உன் சகோதரனின் தோற்றம் நாலாவது அவதாரம்போலிருந்தது கண்டு இது ஏதோ அனர்த்தத்திற்குத் தான் என்று நினைத்தேன். அதுவே சரியாகிவிட்டது. அம்மா! என் மனம் மிகவும் தத்தளிக்கின்றது. நான் என்ன செய்வேன்? செல்வி! என்னிடமே உன்னை வைத்துக்கொள்ள நான் சற்றும் தியங்கவில்லை. கற்பகமும் உன்மீது ப்ரியமாகவே நடத்துவாள். நீ விரும்புகிறாயல்லவா? யோசித்துச்சொல்லு.

ராஜம்:—ஐயனே!...என்னுடைய பிறவி எத்தனையோ உயர் வாக விருக்குமென்று எண்ணிய காலம் மறைந்து என்னைப்போன்ற பாவி யுண்டா என்று கூறும்படியான விதி யமைந்துவிட்டது. என்னை இத்தனை யன்புடன் யார் இனி அழைக்கப்போகிறார்கள்? நான் தங்களுடைய ஆதரவிலிருக்கக் கொடுத்து வைக்கவேண்டுமே! தாங்கள் எப்படிச் சொன்னால் அப்படியே நடக்கத் தயாராக இருக் கிறேன். என் துயரும் என் வாழ்க்கையும் தங்கள் கையிலிருக்கிறது.... என்று கண்ணீர் விட்டபடியே கூறினாள்.

ஏகா:—அம்மா! கோடிக்குக் காய் மீதியல்ல. எனக்கு உன் மீதுள்ள கரை கடந்த வாஞ்சைக்கு உன்னை ஆதரிக்கும் பொறுப்பு வாய்ந்ததை நான் மிக்க சந்தோஷமாக எண்ணுகிறேன். நான் அடிக் கடி வெளியில் செல்ல நேரும்போது, நீ தைரியமாயிரு; அதைரியப் டாதே. என்னால் கூடிய வரையில் நான் முயற்சி செய்து பார்த்து விடுகிறேன்—என்று தேறுதல் கூறினார்.

ராஜத்திற்கு மனம் குழம்பிப்போய்விட்டது. "இவர் எத்தனை அன்பாயிருந்தபோதிலும் தான் அனுவசியமாய் இவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பது சரியில்லை. நம்மீதுள்ள வாஞ்சையினால்

என்னருமை மோகனைக் காப்பாற்றினால் போதும். இதற்குமேல் நாம் சிரமம் கொடுப்பது தகாது. ஆம்; ஆம். குழந்தை முதல் நம்மை ஆதரித்து வந்த சங்கரன், மரகதம் அவர்களிடமே இருந்தால் என்ன? அதுதான் சரி'' என்று ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருந்தாள். கண் மட்டும்—தன் தொழிலை—நீரை கக்கிக்கொண்டிருந்தது. இதைக் கண்ட ஏகாம்பரம் ''ஏனம்மா! என்ன யோசனை செய்கிறாய்?'' என்று அன்பாகக் கேட்டார்.

ராஜம்:—ஐயனே! ஒன்றுமில்லை. தாங்கள் வித்யாசமாக எண்ணக்கூடாது. என்னை சிறு பிராயம் முதல் வளர்த்துப் பழகிய சமையற்கார சங்கரனும் அவன் மனைவியும் தனியாகத்தானிருக்கிறார்கள். அவர்களிடமே நான் சென்று இருக்கிறேன். அதுதான் சகல விதத்திலும் தேவலை என்று தோன்றுகின்றது...

அதே சமயம் ஓர் தாழங்குடையைப் பிடித்துக்கொண்டு சங்கரனும், மரகதமும் மழையில் பாதி நனைந்தும் நனையாமலும் குளிரக் குளிர அங்கு கதவினருகிலேயே நின்று ''ஐயா! உள்ளே வரலாமா?'' என்றார்கள். அவர்களைக் கண்டதும் பரம ஆச்சரியமடைந்த ராஜம் '' ஆ, சங்கரா! மரகதம்!'' என்று கூறிக்கொண்டே ஓடிப்போய் மரகதத்தைக் கட்டிக்கொண்டு ''இந்த நிமிடந்தான் உங்களைப்பற்றி நான் பேசினேன். இப்போதே என் முன் தோன்றுகிறீர்களே... என்ன ஆச்சரியம்!'' என்று வியப்புற்றாள்.

182994

மரகதம் ராஜத்தை அணைத்துக்கொண்டு தம்பித்து நின்றுவிட்டாள். சங்கரன் கண்ணீர் பெருகிவர ''அம்மா...கொழுந்தே... நான் ஒரு வீட்டில் சமையல் செய்துகொண்டிருக்கிறேன். நம் வூட்டு வேலெக்காரன் ஓடிவந்து தங்களை சின்ன ஐயா...புண்ணியவான்... அடித்துத் துரத்திவிட்டதாகவும், நீங்கள் புலம்பியபடியே மழையில் இவ்விடம் சென்றதாயும் கூறினான். சமையலை சற்று அவர்களையே பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு நான் மரகதத்தை அழைத்துக் கொண்டு ஓடிவந்தேன்.

அம்மா! நீங்க பிறக்கிறதற்குச் செய்த தவமென்ன? பெரிய எஜமான் உங்களை வளர்த்த அருமை என்ன! இப்போதிருக்கும் கதி

என்ன!...ஆகா! அவைகளை நினைத்தால் மனம் தவிக்கிறது. தாயே... எங்க செல்வக் குழந்தை...உங்கள் உப்பைத் தின்று வளர்ந்த நாங்கள் ஓங்களை இந்த நிலைமையில் பார்க்க சகிக்கவில்லை. எங்க குடிசையே உங்களுடைய சொந்த குடிசை. நாங்கள் குடிக்கும் கஞ்சியே நீங்களும் குடியுங்கள். எங்களுடன் வாருங்கள் அம்மணி!'' என்று கண்ணீர் பெருக, அபாரமாய்ப் பொங்கும் வாஞ்சையுடனும் விசனத்துடனும் அழைத்தார்கள்.

ஏகாம்:—ஆகா! உங்களுடைய விச்வாசத்தின் மேன்மையே மேன்மை...உடன் பிறந்த அண்ணன் சத்ருவாகிவிட்டான். வீட்டிலிருந்த நீங்கள் இத்தனை அன்பு காட்டுவதால்தான் மழை இக் கலியிலும் பெய்கிறது. ராஜம் இப்போதுதான் உங்களிடம் போய் இருப்பதாகக் கூறினாள். அடுத்த நிமிடமே நீங்களும் வந்தீர்கள். ராஜம்... உன்னிஷ்டம் நிறைவேறியது. கடவுள் பூர்ண வெற்றி யளிக்கவேண்டுமாய் ப்ரார்த்தனை செய்து வா...யாரடா அங்கு...காரைக் கொண்டு வா...என்றார்.

அடுத்த நிமிடமே கார் தயாராகி விட்டது. ஏகாம்பரம் "ராஜம்...தைரியமாயிரு...ஐயா!...இவளை ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள்ளுங்கள் நான் அவ்வப்போது வந்து பார்க்கிறேன்...என்று கூறியபடியே அவர்களைத் தம் மோட்டாரில் ஏத்தி வழியனுப்பினார்.

சங்கரன் வீட்டிற்குச் சென்ற ராஜத்திற்கு இருக்கை கொள்ளுமா! மனம் கட்டிலடங்காது தவிக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றுகின்றது. சங்கரனும் மரகதமும் எத்தனையோ அன்பாக நடத்துகிறார்கள். கிருஷ்ணன் இவளை வீட்டை விட்டுத் துரத்திய பிறகு இவளைப்பற்றி நினைக்கக்கூட இல்லை. ஏகாம்பரத்தின் வரவையே ராஜம் எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள்.

நாட்களோ ஓடி மறைந்துகொண்டே இருக்கின்றன. ஏகாம்பரம் ராஜத்தை தினம் ஒரு முறை பார்த்துவிட்டுச் செல்கிறாரேயன்றி "எத்தனையோ நானும் ப்ரயாசைப்பட்டுத்தான் வருகிறேன். ஒரு சிறிது விஷயம் விளங்கி இருக்கிறது. ஆனால் அதை இப்போது வெளியிடக்கூடாது. நான் பிறகு உனக்குத் தெரிவிக்கிறேன்'' என்று

சொல்லிவிட்டார். 'எப்போது நல்ல செய்தி காதில் எட்டும்?' என்று எண்ணி ராஜம் சதா கடவுளை த்யானித்தபடியே இருக்கிருள். அகதிக்குத் தெய்வமே துணையன்ருே!

21-வது அதிகாரம்

உண்மை மலர்கள் உதிர்ந்த விநோதம்

"அம்மா! அம்மா! இதோ! இந்த பத்திரிகையைப் பாருங்கள். இதோ! இந்த தலையங்கத்தைப் படியுங்கள்.'' என்று சங்கரன் அவசரத்துடன் ஒடிவந்து ஒரு பத்திரிகையை, சோர்ந்து துவண்டு கம்பத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ராஜத்தின் கையில் கொடுத்தான். அம் மொழியைக் கேட்டு மிக்க பரபரப்பும், ஆவலே வடிவாயும் ராஜம் அந்த பத்திரிகையை வாங்கி தலையங்கத்தை உற்று கவனித்தாள். பெரிய கொட்டை எழுத்தில்

ஆச்சரியமான செய்தி

"தர்மலிங்கம் ப்ரபுவை மோகன் கொலை செய்யவில்லையாம். உண்மைக் குற்றவாளிகளைத் தேடிவருகிருர்கள். மோகன் குற்றவாளி யல்லவென்றது மட்டும் சிறிது விளங்கி இருக்கிறதாம். இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் மிக்க ஊக்கம் எடுத்துக்கொண்டு வேலை செய்வதாகத் தெரிகிறது. மற்ற விவரங்கள் பின்னர் வரும்.'' (ஒரு நிருபர்)

என்றதைப் படித்ததும் வாடி வதங்கிய தாமரை மலர் போன்ற ராஜத்தின் முகம் சூர்யோதயத்தைக் கண்ட தாமரையைப்

போன்று மலர்ந்தது. சந்தோஷ மேலீட்டால் அதையே பல தரம் படித்தாள். "ஹா!...சங்கரா!...இந்த தகவல் உண்மையானதாக விருந்து என் மனமும் இதயமும் களிக்கவேண்டுமே! கடவுள் க்ருபை புரிவாரா?" வென்று அப்படியே கம்பத்தோடு சாய்ந்தாள்.

மரகதம் ராஜத்தை அணைத்துத் தடவியபடியே "அம்மா! நீங்கள் இனி வருத்தமே படவேண்டாம். நேற்றிரவு எனக்கு திவ்ய மான சொப்பனம் வந்தது. அதாவது நாம் இருவரும் கோயிலுக் குச் செல்கிறோம்; அங்கு அம்மன் சன்னதியில் அம்மன் தரிசனம் செய்கையில் அந்தம்மனே வாய் திறந்து "நீ இனிமேல் வருந்தாதே. சீக்கிரத்திலேயே உன் கஷ்டம் விடிந்துவிடும். இந்தா! மஞ்சள், குங்குமம், புஷ்பம், சந்தனம், பழம்" என்று சொல்லி ஒரு தட் டுடன் அம்மனைப்போன்ற ஓர் பெரிய சுமங்கலி உன் கையில் கொடுத்ததுபோலவும் நாம் அந்தம்மாளை வணங்கிவிட்டு அவைக ளைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்ததாயும் சொப்பனங் கண் டேன். அது வெகு நல்ல சொப்பனமாகையினால்தான் இன்று உதயத்திற்கே மோகன்,குற்றவாளியல்லவென்ற நற்செய்தி கிடைத்து விட்டது. நீங்கள் தைரியமாய் அம்மனை நம்பி இருங்கள்" என்றாள்.

இதைக் கேட்ட ராஜம் சந்தோஷப் பூரிப்புடன் "ஹா! மரகதம்! நீதான் எனக்குத் தாயார். சங்கரா! நீதான் என் தந்தை உன் சமையல் வேலையை விட்டுவிட்டு வந்தாயே. உன் எஜமா னர்கள் திட்டமாட்டார்களா?" என்றாள்.

சங்—அம்மணி! உங்களுக்கு இச் சந்தோஷச் செய்தியைக் கூறுவதைவிட வேறு சந்தோஷம் எனக்குண்டா! அந்த எஜமானரின் மனைவி தினம் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருப்பார்கள். நம்ப பெரிய எஜமான் நடத்திய பத்திரிகையின் அழகும் அதில் வரும் விஷயங்களின் சாரமும் அதை பொது ஜனங்கள் ஆதரித்த தையும் கண்ணாரக் கண்ட நான் அதே பத்திரிகை அவர் மறைந்த பிறகு அதன் சுவையும் மறைந்து பாழாகிவிட்டதையும் கண்டாய் விட்டது.

அதன் பிறகு பத்திரிகையே நான் பார்ப்பது கிடையாது.

இன்று அந்தம்மாள் இதே தலையங்கத்தைப் படித்ததும் தன் மகளை அழைத்து இதை உரக்கக் கூறினாள். அவ் வார்த்தைகள் சமையல் உள்ளே என் காதில் விழுந்தன. உடனே நான் அடைந்த ஆநந்தம் கூறவே திறமில்லை. எஜமானியுடன் வந்து "அம்மா! வீட்டில் என் மனைவிக்கு ஜுரம் காயுது; நான் சென்று ஏதாவது ஆகாரம் கொடுத்துவிட்டு வருகிறேன். அடுப்பை வேலைக்காரியைப் பார்க்கச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு கடைக்குச் சென்று இதை வாங்கிக் கொண்டு ஓடிவந்தேன்'' என்றான்.

ராஜம்:—ஆகா! நீங்களிருவரும் என்னிடம் கொண்டுள்ள வாஞ்சைக்கு நான் எப்படித்தான் கைம்மாறு செய்வேன்? நான் ஏதோ ஒரு கடுகளவு புண்ணியம் செய்திருப்பதனால்தான் பெற்றோரும் மறைந்து, மனத்தினால் வரித்த மன்னனும் பிரிந்து, உடன் பிறந்த சோதரனும் என்மீது எரிந்து விலக்கி என்னை அனாதையாய்த் தெருவில் தள்ளிய சமயம் என்னை ஆதரிக்க நீங்கள் தோன்றினீர்கள். நீங்கள் இல்லையேல் என்கதி யாதாகும்?

சங்கரா! நீயொரு காரியம் செய்கிறாயா! நமது இன்ஸ்பெக்டர் நாலைந்து நாட்களாக வரவே காணவில்லை. வெளியூருக்குச் சென்றிருக்கிறாரோ என்னவோ புரியவில்லை. நீ சென்று விசாரித்துக்கொண்டு வருகிறாயா!....என்று வெகு நயமாயும், அன்போடும் கேட்டாள். சங்கரன் "இதோ போய்வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே ஓட்டமாக ஓடினான்.

ராஜத்திற்கோ இப் பத்திரிகையைப் பார்க்கும்போது தன் ஆதி காலத்துப் பழங் கதைகள் முற்றும் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. தன் பிதா பத்திரிகை நடத்திய அழகும், அது விற்ற வேகமும்,தான் பத்திரிகாலயத்தில் வேலை செய்ததும் எல்லாம் ஞாபகத்திற்கு வந்து கண்ணீர் உதிர்ந்தது. அதே பத்திரிகை தற்போது சீரழிந்து விட்டதைக் காண மனம் எப்படித்தான் தவிக்காது. பழங் கதைகளை எண்ணமிட்ட வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

அச்சமயம் சங்கரன் வந்து "அம்மணீ! அவர் எங்கோ ஊருக்குச் சென்றிருக்கிறாராம். எப்போது வருவார் என்று தெரியாதாம்.

ஆனால் உங்கள் காரியம் கட்டாயம் ஜெயமாகிவிடுமென்று உங்களிடம் சொல்லும்படி அந்தம்மாள் தெரிவித்தார்கள்.'' என்று கூறி விட்டுச் சென்றான்.

ராஜத்திற்கு இம்மொழிகள் பின்னும் சிறிது தைரியத்தையும் தெம்பையும் அளித்தன. ஏகாம்பரத்தின் வரவையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னும் நான்கு தினங்கள் சென்று மறைந்தன. ராஜத்தின் அக்கிரம நடத்தையைத் தான் கண்டித்த தால் அவள் ஓடிவிட்டாள் என்கிற பழியை க்ருஷ்ணன் ஊர் முற்றும் பறை சாற்றிவிட்டான். இக்கடு மொழியும் சுடுசரம் போல ராஜத்தின் செவியில் விழாமலில்லை. கால வித்யாஸத்தை எண்ணி மிக்க பொறுமையாயிருப்பதை வ்ருதமாகக் கொண்டாள். மக்களுக்கு பொறுமை யளிக்கும் பெருமை வேறு எதுவும் அளிக்கமாட்டாதல்லவா?

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் இரவு சுமார் எட்டு மணி சமயத்திற்கு வெகு சந்தோஷ முகத்துடன் ராஜத்தின் அருகில் வந்து உட்கார்ந்தார். ராஜம் பரபரப்புடன் எழுந்து இன்ஸ்பெக்டர் கையைப் பிடித்துக் கொண்டு, "ஐயனே! விஷயம் எப்படியாயிற்று? இத்தனை தினங்களாக உங்களைக் காணாது என் மனம் தவித்து விட்டதே...... இதோ இப்பத்திரிகையில் வந்துள்ள விஷயம் சரிதானா......எனக்கு விமோசனம் பிறந்ததா?'' என்று கேட்டாள்.

ஏகாம்:—செல்வீ! இப்படி உட்காரு; உனக்கு மிகவும் ஆச்சரியமானதும், நீயே நம்பத் தகாததுமான விஷயத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். நானே இம்மாதிரி இருக்குமென்று எதிர் பார்க்கவே இல்லை. குற்றவாளியைக் கண்டு பிடித்துவிட்டேன். பகிரங்கப் படுத்துவதுதான் மிச்சம். குற்றவாளி யாராக விருக்கும் சொல்லு பார்க்கலாம்......

ராஜம்:—ஹா......குற்றவாளி பிடிபட்டானா......இதென்ன விபரீத விஷயம்! அந்தச் சண்டாள நாகலிங்கத்தைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? ஆகா! மோகன் விடுதலையாகி விட்டானா?...

ஏகாம்:—இரும்மா!......அவசரப் படாதே. குற்றவாளி பிடிப் பட்டால் மோகன் தானே விடுதலையாகிறுன்......ராஜம்.........நீ சொல்லியபடி குற்றவாளி நாகலிங்கமில்லை...நானும் அப்படித்தான் எண்ணினேன்...இந்த விவரங்கள் ஒன்றும் நாகலிங்கத்திற்குத் தெரியவே தெரியாது. குற்றவாளிகள் யார் தெரியுமா......உன் சகோதரன் கிருஷ்ணனும் அவன் சகாக்களுந்தான்.

என்று முடிப்பதற்குள், "ஹா...ஹா...என்ன! என்ன!...... கிருஷ்ணனும் அவனது சகாக்களுமா !......ஐயோ !......மகனை பெற்ற பிதாவைக் கொன்றுன்! ஐயோ......இதென்ன அனியாயம் ......ஐயா!......இது உண்மையா......இதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?......மோஹனைத் தூக்கிலிட இன்னும் எத்தனை நாள் இருக்கிறது ?

ஏகாம்:—அம்மா! அந்த நாள் நெருங்கி விடுகிறதே என்று தான் இரவு பகலாக உழைத்து அலைந்து இதை கண்டு பிடித்தேன் நாளை மறு நாள் அவர்கள் சட்டப்படித் தூக்கிலிட வேண்டும். நான் கவர்மெண்டிற்கு தந்திகொடுத்திருக்கிறேன். அதாவது மோகன் குற்றவாளி யல்லவென்று ஆதாரங்கள் கிடைத்து வருவதால் தூக்கு போடும் நாளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். விஷயம் முற்றும் விளங்கி விட்டது.

அம்மா! ராஜம்! நான் அன்று தெரிவித்தபடி அக்கடிதத்தையே ஓர் ஆதாரமாகக் கொண்டு தேட ஆலோசித்தேன். எனக்கும் உன்னைப்போல நாகலிங்கத்தின் மீதே சந்தேகம் பிறந்ததால் அவனையே கவனிக்க எண்ணினேன். என்னுடைய சப் இன்ஸ்பெக்டரையும் ஹெட் கான்ஸ்டேபிலையும் எனக்குத் துணையாகக் கொண்டு வேலை செய்ய வாரம்பித்தேன்.

என் ஹெட் கான்ஸ்டேபிலுக்கு ஓர் பிச்சைக்கார வேஷத்தைப் போட்டு விஷயங்களைச் சொல்லிக் கொடுத்துத் தன் மனைவி திடீரென்று இறந்துவிட்டதாயும், அவளை அடக்கஞ் செய்ய கையில் தம்பிடி கூட இல்லை என்றும், காலணுவாவது கொடுத்து உதவவேண்

டும் என்று கூறிக் கண்ணீர் விட்டு அழச் சொல்லி சரியாக நடிக்கக் கற்றுக் கொடுத்து அனுப்பினேன்.

நேரே அங்கே மட்டும் சென்றால் சந்தேகம் வரும் என்று எண்ணி அவ்வீதியில் பல வீடுகளுக்குச் சென்று யார் யார் எத்தனை கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு கையெழுத்துப் போடச் சொல்லும்படிச் செய்தேன். அவனும் அதேபோல வீதி முற்றும் அலறியடித்துக் கொண்டு எல்லோரிடமும் ஓரணா, இரண்டணா காசும் கையெழுத்தும் வாங்கிக்கொண்டே உங்கள் வீட்டிற்கும் சென்று அழுதானும்.

அப்போது எல்லோரும் குடித்துவிட்டுச் சீட்டாடிக் கொண்டிருந்தார்களாம். அவன் சென்று பெரிதாகப் புலம்பியதைக் கண்டு நகைத்தார்களாம். பெண்டாட்டி செத்தால் இழுத்தெறிந்து விட்டுப் போயேண்டா......என்றார்களாம். "இழுத் தெறியத்தான் கட்டெ முட்டெக்குக் காசு ஒணும். இதோ பாருங்க இத்தனை பேரும் கையெழுத்துப் போட்டிருக்காங்க." என்று கையெழுத்துத் தாளைக் காட்டி அழுதானும்.

அவர்களின் ஆட்டத்து ஜோரிலும் குடியின் வேகத்திலும் இதைப் பரிகாஸமாக எண்ணி "அடே! நாம் எல்லோரும் கையெழுத்துப் போட்டு இக்காகிதத்தை ரொப்பிவிட்டு தம்பிடி குடுத்தனுப்புவோம்ண்டா" என்று கிறக்குப் பிடித்தபடியே கூறிவிட்டு அத்தனைபேரும் கையொப்பமிட்டு, நிறைய ஸைபர் போட்டு விட்டுக் கடைசியில் தம்பிடி கொடுத்துவிட்டு கடகடவென்று சிரித்தார்களாம்.

நமக்கு வேண்டியது கிடைத்து விட்டதால் அவன் சந்தோஷப்பட்டதைக் காட்டிக் கொள்ளாமல் "ஐயோ! தர்மாத்துமாக்களே! தம்பிடியெ கொடுத்துத் தொறத்திறத்திற்கா இத்தினேகையெழுத்து. ஐயோ! தேவுடா!" என்று திட்டிக் கொண்டே இன்னும் சில வீடுகள் போவதுபோலப் போய்விட்டு வந்து சேர்ந்தான்.

ராஜம்:—ஆகா! என்ன தந்திரம் செய்தீர்கள்!......அந்த கை

யெழுத்தில் எதுவாவது புலன் கிடைத்ததா?...என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

ஏகாம் :— இத்தனை ச்ரமப்பட்டதும், ஐயோ பாவம்! உயிருடன் இருப்பவளை இறந்துவிட்டதாக நடித்ததும் எதற்கு? கடிதத்தையும் வைத்துக்கொண்டு, இந்த கையெழுத்துகளையும் வைத்து ஒத்திட்டு வெகு நேரம் பார்த்தேன். கடிதம் ஒரு கைப்பட எழுதியதல்ல. இரண்டு கைகள் கலந்திருப்பதாக நான் சந்தேகித்த படியே கடிதத்தில் கண்டுள்ள கையெழுத்துக்கள் இதில் இருப்பதை வெகு எளிதாகக் கண்டு பிடித்து விட்டேன்.

உடனே அந்தக் கூட்டத்தைக் கவனிக்கத் தொடங்கினேன். அதில் ஒரு டாக்டரும் சேர்ந்திருப்பதைக் கண்டேன். இந்த கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சம்பளம் 30, 40, 50, இதற்குமேல் ஒருவருக்குமே இல்லை. சிலருக்கு வேலையே கிடையாது. தண்டசோற்றுத் தடி ராமன்கள். ஆனால் இவர்கள் இத்தனை அட்டகாஸமாக உடுத்துவதும், மோட்டாரில் திரிவதும் பெரிய பெரிய ஹோட்டலில் போய் சாப்பிடுவதும், குதிரைப் பந்தயம் சினிமா முதலியவைகளுக்குத் தவறாது செல்வதையும் நான் வெகு யூகமாய் மாறுவேடத்தில் கவனித்து வந்தேன்.

ஒரு தினம் இவர்கள் இன்ப பவனத்திற்குச் சென்று ஏதோ ஒரு டீபார்டிக்காக அவ்விடத்திலேயே ஏற்பாடு செய்தார்களாம். அதற்காகப் பணமும்,முன்பு இவர்கள் சாப்பிட்ட பாக்கியுமாக மொத்தம் 80 ரூபாய் பில்லை மானேஜர் கொடுத்தார். அதையவர்கள்;வாங்கிக் கொண்டு ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து மிச்சம் இருபது ரூபாய் பணத்தை வாங்கிக் கொண்டார்கள்.

நானும் அதே சமயம் அந்த ஓட்டலிலேயே இருந்தேன். அவர்கள் சென்றதும் மானேஜரிடம் சென்று தந்திரமாகப் பேச்சுக் கொடுத்தபடியே அந்த நோட்டைக் கவனித்ததில் அது உன் தந்தையின் நோட்டுக்களில் ஒன்று என்று நம்பரால் விளங்கி விட்டது.

உடனே மானேஜருக்கு விவரத்தைக் கூறி இதை ரகஸியமாய் வைத்திருக்கும்படிக்குத் தெரிவித்துவிட்டு நோட்டை வாங்கிக் கொண்டுபோய் போலீஸில் தாக்கல் செய்தேன்.

"10 ஆயிரம் ரூபாய் களவு போனதில் 2 நோட்டுக்கள் தான் மோஹனின் கணக்கில் வந்தன. மிச்சம் எப்படித்தான் போகமுடியும். ஒன்றுக்கும் வகையில்லாத இவர்களுக்கு இத்தனை ஆடம்பரத்திற்குப் பணமேது?" என்று சந்தேகம் உதித்ததால் தான் இவர்களைக் கவனித்தேன். கடிதமும், நோட்டும் இதே கூட்டத்தினரிட மிருந்து கிடைத்ததால் என்னுடைய சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது.

உடனே திடீரென்று அந்த வைத்தியனிடம் சென்றேன். அவன் எங்கேயோ அவசரமாகப் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். நான் எதிரே சென்று ", நில்; நில்" என்றேன். அவன் என்னைப் பார்த்த உடனே நடு நடுங்கிப்போய் விழித்து விட்டான். சற்று சமாளித்துக் கொண்டு "என்ன சமாச்சாரம்? எங்கே வந்தீர்கள்?" என்றான்.

"நான் வந்த காரியம் தெரிய வில்லையா! உம்மைக் கைது செய்வதற்காகத்தான் வந்திருக்கிறேன்." என்ற உடனே அவன் நெருப்பை மிதித்தவன் போன்று அலறிவிட்டான். "என்னையா கைது செய்யப் போகிறீர்? நான் என்ன குற்றம் செய்தேன்? நான் ஒரு பாபமும் செய்யவில்லையே?......என்று மாயாஜாலம் செய்தான்.

உடனே அவனை இழுத்து உட்கார வைத்து "போதும் நிறுத்து. நான் உனது செய்கைமுற்று மறிவேன். உனது பெற்றோர்கள் எனக்குப் புதியவர்களல்ல. பாலியம் முதல் தெரிந்தவர்கள். அவர்களுக்கும் உடனே வரும்படி தந்தியடித் திருக்கிறேன்." என்றதும் முன்னிலும் அதிகரித்த குழப்பமும், கலக்கமும் அடைந்து திகைத்து விட்டான். மீண்டும் நான் பேசத் தொடங்கி" நீ இனி என்ன நாட்டியம் நடித்தாலும் உபயோகமில்லை.

நீ தர்மலிங்கம் ப்ரபுவின் வீட்டில் நடந்த கொள்ளையிலும்,

கொலையிலும் சம்மந்தப் பட்டிருப்பதை நான் கண்டு பிடித்து விட்டேன். நீ பெரிய குடும்பத்துப் பையனாகப் பிறந்தும் உன் புத்தி சகவாஸ தோஷத்தினால் கெட்டுவிட்டது. நீ உண்மையை ஒன்று கூட விடாமல் கூறினால் உன்னை அப்ரூவராக எடுத்துக்கொண்டு தண்டனையை மிகவும் குறைத்தோ அன்றி தண்டனையே இல்லாமலோ செய்ய ஏற்பாடு செய்கிறேன். உன் பெற்றோர்களும், மாமனாரும் வந்து விட்டால் ரகளையாகிவிடும். ஊம். நன்றாக யோசனை செய். நீங்கள் எல்லோரும் சேர்ந்து செய்துவிட்ட காரியத்தினால் நிரபராதியைத் தூக்கிலிடவல்லவா பார்த்தீர்கள்......என்றேன்.

பையன் பாடு பதறிவிட்டது. அவன் விழிக்கும் விழிப்பில் அவனே குற்றவாளி என்று நன்கு தெரிந்துவிட்டது. திரும்பத் திரும்பத் தான் ஒன்றும் செய்யவில்லையே என்று கூறினான். உடனே நான் மோஹனுக்கு எழுதி இருந்த கடிதத்தை எடுத்துக் காட்டி 'இதில் இதோ இந்த வரிகள் உன் கையெழுத்தல்லவா! இதோ இந்த பிச்சைக்காரன் லிஸ்டில் இருக்கும் இது உன் கையெழுத்தல்லவா? இதோ நீ நோயாளிக்கு மருந்து கொடுத்திருக்கும் ப்ருஸ்க்ருப்ஷனில் உன் கையெழுத்தைப் பாரு'' என்று ஏக காலத்தில் இவைகளை எல்லாம் காட்டி விட்டதில் ஆசாமி இன்னும் நடு நடுங்கிப்போய் பிரேதம்!போலாய் விட்டான்.

உடனே அவன் என் காலில் தடாரென்று விழுந்து காலைப் பிடித்துக் கொண்டு "என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் செய்ததெல்லாம் தவறுதல்தான். என்னுடைய போதாக்காலக் கொடுமையே அவர்களிடம் என்னைச் சேர்த்து இப்படி ஆபத்தில் சிக்கச் செய்தது. நான் சகல விஷயங்களையும் கூறிவிடுகிறேன். என்னைக் காப்பாற்ற வேண்டும்'

எனக்கும் க்ருஷ்ணனுக்கும் சில வருடங்களாகத்தான் சம்மந்தமும் சினேகிதமும் உண்டு. 'அவன் பெரிய மனிதன் வீட்டுப் பிள்ளையாயிற்றே! அவன் சினேகம் கிடைத்தால் மோட்டாரில் சுற்றலாம்; பத்திரிகைகள் இனமாய்ப் படிக்கலாம்.' என்ற ஏதேதோ ஆசையைக் கொண்டு பழகவாரம்பித்தேன். கூட இருப்பவர்கள்

மகா மோசக்காரர்கள் என்பது எனக்குத் தெரியாது. கிருஷ்ணனும் அதே செட்டில் சேர்ந்தவன் என்பதும் தெரியாது. 'பன்றிக் குட்டி யுடன் சேர்ந்த கன்றுக் குட்டியும் நரகல் தின்னும்' என்கிற பழ மொழிப் படிக்கு என் கதியாகிவிட்டது.

நான் அவர்களுடன் வெகு குசாலாகவும் அவர்கள் செய் வதே நியாயம் என்ற மனப்பான்மையுடன் பழகவாரம்பித்தேன். அவர்களுக்குத் தாளம் போடுவதையே தொழிலாகக் கொண்டேன். என் வைத்தியத் தொழிலின் விருத்தியையும் மறந்தேன். அவர்க ளுக்குக் கடன் அதிகரித்துவிட்டதால் கிருஷ்ணன் பாடு வாரண்டில் பிடிபட்டுவிடுவான்போலாகிவிட்டது. தான் வாரண்டில் பிடிபட்டா லும் தகப்பனர் தனக்குப் பணங்கொடுத்துக் கவனிக்கமாட்டார். வாரண்டில்தான் சிக்கி அவமானமுறச் செய்வார் என்ற ஆத்திரம் உண்டாகியது. அதற்குத் தக்கபடி சகாக்களும் தூபம் போட் டார்கள்.

தர்மலிங்கம் எப்போதும் தன் மகள்மேலேயே அதிக ஆசையா யிருப்பதாயும், தன்மீது ஆசையே இல்லை என்றும் கிருஷ்ணன் தன் பிதாவின்மீது கடுமையான ஆத்திரத்தை உள்ளுக்குள்ளேயே கொண்டிருந்ததோடு, பிச்சைக்காரனுக வந்த மோஹன் இத்தனை பெரிய மதிப்பு பெற்று தன் பிதாவாலேயே கவுரவப்படுவதும் ராஜம் அவனை நேசிப்பதும் அவனுக்கு மிக்க பொருமையையும் அள விலாத பகையையும் மூட்டியது.

மோஹன் மீது தன் பிதா வைத்துள்ள நம்பிக்கையினுல் அவனுக்கு எங்கே பெண்ணையுங் கொடுத்து சொத்தையுங் கொடுத்து விடுவாரோ, தனக்கு ஒன்றுமில்லாது போய்விடுமோ என்ற பயம் உண்டாகியதால் மோஹன்மீது பகை அதிகரித்தது. அதோடு நாக லிங்கத்திற்கு ராஜத்தை மணக்கவேண்டுமென்ற ஒரே ஆசை இருந்த தால் அந்த வகையில் மோஹன் தனக்கு விரோதியாக வந்துவிடப் போகிருனே என்று மிக்க பொருமை ஏற்பட்டதேயன்றி தர்மலிங் கத்தினிடம் சற்றும் வித்யாசமே இல்லை.

நாகலிங்கத்திற்கே தன் தங்கையைக் கொடுத்து விவாகம்

செய்துவிடுவதாயும் தன்னை நம்பும்படியும் உறுதி கூறி அவனைக் கொண்டே மோஹன் மீது வித்யாச எண்ணத்தைத் தந்தைக்கு உண்டாக்கி அவனையும் வேலையை விட்டு ஓட்டிவிட்டான். வேலையை விட்டுச்சென்ற பின்னரும் ராஜமும் மோஹனும் ப்ரீதியாயிருப் பதை யறிந்த கிருஷ்ணன் மோஹனையும் தொலைத்துத் தன் கடனையும் தீர்த்துக்கொள்ள எண்ணித் துணிந்து சமயம் பார்த்திருந்தான்.

நாகலிங்கத்திற்கு சொத்துக்கள் சேர்ந்ததாயும் கல்யாணத் திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அவன் பிதா கடிதம் எழுதி யிருப்பதுபோலும் இவனே சகலமும் (போர்ஜரி) கள்ளக் கை யொப்பமிட்டுச் செய்து நாகலிங்கத்தைத் தூக்கிவிட்டான். அவன் ராஜத்தைத் தான் மணப்பது மட்டுந்தான் எதிர்பார்த்தான்.

மோஹனை அக் கொள்ளையில் மாட்ட வைப்பதற்காகவே அக் கடிதத்தை எழுதி அனுப்பியது உண்மையே...ஆனால் அப்போதும் தர்மலிங்கத்தைக் கொலை செய்வதென்ற எண்ணம் கிருஷ்ணனுக்கோ, மற்ற யாருக்கோ இல்லை. அவர் பாங்கியில் கட்டாது கையில் பணம் ரொக்கமாய் பெருந்தொகை வைத்திருப்பதைத் திருடிவிட வேண்டு மென்பதுதான் அவர்கள் எண்ணம். அதில் மோஹனை மாட்டி விட்டால் ஏற்கெனவே அவன்மீதுள்ள சந்தேகம் ஊர்ஜிதமாகி விடும். நாமும் தப்பித்துக்கொள்ளலாம்'' என்று முடிவு கட்டிவிட் டார்கள்.

காவல்காரர்களுக்கும், நாய்களுக்கும் முறையே மயக்க மருந் தும், பாஷாணமும் என்னிடமிருந்தே எடுத்துப் பக்குவப்படுத்திக் கொடுத்துவிட்டேன். அதை மாலையில் பந்தாடப் போன நேரம் பக்குவமாய்ப் போட்டுவிட்டார்கள். இரவு பணத்தை எடுத்துக் கொண்டு ஓடி வந்து விடவே எண்ணினார்கள். ஆனால், சத்தியமாகச் சொல்கிறேன். நான் அந்த கோஷ்டியுடன் போகவில்லை. தர்மலிங் கத்தின் வீட்டிலேயே கிருஷ்ணனும் நானும், இன்னும் சிலரும் இருந்து கொண்டு சந்தேகிக்க இடமின்றி வேறு ஆட்களை யனுப்பினோம்.

சாமர்த்தியமாய்த் திருடிக்கொண்டு வருகிறவர்களுக்குத் தலைக்கு ஆயிரம் ரூபாய் இனமாகக் கொடுப்பதாகத் தெரிவித்தான்.

பணம் எடுத்துக்கொண்டுவரும்போது யாரோ வருவதுபோல் தோன்றியதாம்...உடனே தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சுட்டுவிட்டார்களாம். அப்போதும் தர்மலிங்கம் என்று தெரியா தாம். காலையில் பார்த்த பிறகு தான் தெரிந்ததாம். அதைக் கண்ட கிருஷ்ணனுக்கு மிக்க பயமும் விசனமும் உண்டாகிவிட்டன. நடு நடுங்கிவிட்டான். உடனிருப்பவர்கள் அவனைத் தேற்றி'' கொலையை யும் மோஹன் மீதே நிச்சயித்துவிடுவதற்கான சூழ்ச்சிகளைச் செய்து விடலாம். நீ பயப்படாதே'' என்று சாவியை முடுக்கி தூபதீபம் போட்டுவிட்டார்கள்.

என்னிடமிருந்த பாஷாணத்தையும், மயக்க மருந்தையும் கொண்டு மோஹன் பெட்டியில் வைத்து சந்தேகத்தைப் பலப் படுத்திவிட்டார்கள். பிறகு நடந்தவைகள் தான் உங்களுக்குத் தெரியும். எனக்கு முதலில் இத்தனை விபரீதமாகுமென்று தெரியவே தெரியாது. சகவாஸ தோஷத்தின் பலனுல் நானும் பரம அயோக்யனுய் கல்லினுங் கொடிய கடின சித்தனுகிவிட்டேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல எனக்கு இந்த நிமிடம் புத்தி வந்தது. இனி என்ன செய்வேன்? இந்த நிமிடம் வரை யில் நான் பெருங்குற்றம் செய்தவன் என்பதைக் கனவிலும் நினைக் காது திமிர்;படைத்தே இருந்தேன். என்னைக் காப்பாற்றவேண்டும். இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம். நாகலிங்கத்திற்கு இன்று வரையில் ஒரு பாபமும் தெரியாது. ராஜத்தை வீட்டை விட்டு ஓட்டியதால் அவனுக்கும் கிருஷ்ணனைக் கண்டால் பிடிக்கவில்லை. அதுவும் எனக்குத் தெரியும்''...என்று ஒன்றும் விடாமல் மூச்சைப் பிடித்துக்கொண்டு கூறினன்.

நமக்கு வேண்டியது எம்மட்டுமோ அத்தனையும் கிடைத்து விட்டதல்லவா? ராஜம்!...எப்படி இருக்கிறது விஷயம்...நான் உடனே இந்த தகவலை அதிகாரிகளுக்கு தக்க ஆதாரத்துடன் சட் டப்படிக்கு விளக்கிவிட்டேன். அந்த டாக்டரை அப்ரூவராக எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்னேரம் மற்றவர்களைக் கைதி யாக்கி இருப்பார்கள். இன்னும் வெகு சீக்கிரத்திலேயே மோஹன் விடுதலையாகி விடுவான். இனி உனக்குக் களிப்புதான்.

ராஜம் அதிகமான ஆச்சரியமும்,ஒருமாதிரியான உணர்ச்சியும் மேலிட்டவளாய், "ஐயோ! பெற்ற பிதாவிடமே கொள்ளையடிக்கத் துணிந்தான் என்றால் இது என்ன கொடியகாலம்! அந்தோ! தானே கொள்ளையடிக்கச் செய்துவிட்டுத் தானே கொலை செய்தவர்களையும் அறிந்திருக்கையில் இன்னொரு நிரபராதியை மரண தண்டனைக்கு உள்ளாக்கியது எத்தனை கொடிய செய்கை! ஹா! பெற்ற தந்தையி னிடம் கொள்ளையடிக்கச்செய்த மனிதனுக்கு இது ஓர் வியப்பா! என்ன ஆச்சரியம்! நம்பக்கூடவில்லையே! என்னை வீட்டில் வைத் திருந்தால் ஒருகால் ரகஸியம் வெளியாகிவிடும் என்ற பயத்தினால் தான் அபாண்டமான பழியை என் தலையில் துணிந்து சுமத்தித் துரத்திவிட்டான்போல விருக்கிறது.

அந்தோ!...என் தகப்பனார் இருந்த மரியாதையும் கண்ணிய மும் என்ன! அவர் வயிற்றில் பிறந்த மகனின் கதி என்ன! கேட் போர் எள்ளி நகைப்பார்களே. என் மனம் பதறுகிறதே! உடன் பிறந்த அவன் என்னை பரம த்வேஷியாக பாவித்த போதிலும் எனக்கு அவன்மீது அத்தகைய த்வேஷம் உண்டாகவில்லையே— துஷ்ட சகவாஸமாகிய நெருப்பினால் வம்சத்தின் கண்ணியம், மதிப்பு, புகழ், பெருமை, கீர்த்தி முதலிய யாவும் எரிந்து விட்டனவே! ஏன்? அவனுடைய வாழ்க்கையே எரிந்துவிட்டதே. அவன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொண்டானே! ஐயா! இதனால் கிருஷ்ணனுக்கும் தண்டனை கிடைக்குமோ? என்று கேட்டாள்.

ஏகா:—ராஜம்! இதென்ன இப்படி ஒன்றும் தெரியாது போலக் கேட்கிறாய்? அவனுடைய திமிர் படைத்த நிலைமையினால் அவன் வைத்த நெருப்பு முதலில் அவனைத்தான் எரிக்கும். அவனால் தான் இக்கொள்ளையே ஆரம்பமாயிற்று; கொள்ளையினால் கொலை யும் நேர்ந்தது. இவ்விரண்டையும் மறைக்க ஒரு நிரபராதியின் மேல் பழியைச்சாட்டித் தூக்கு தண்டனையையும் வாங்கி வைத் தான். ஆதலால் கொள்ளையடித்தது ஒன்று; கொலை செய்ததை யறிந்தும் மறைத்ததொன்று; அதை மற்றவன் தலையில் சுமத்த சூழ்ச்சி செய்தது ஒன்று. ஆக மூன்று வித சிக்கலிலும் அவனுக்கே

ப்ரதான தண்டனை கிடைக்குமென்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. ராஜம்! நீ இதைப்பற்றிச் சிந்திக்காதே. நான் சென்று வருகிறேன். இவைகளை நீ வெளியிடாதே.'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். ராஜத்திற்கு இந்த உண்மை மலர்கள் உதிர்ந்த வினோதமும். தன்னுருயிர்க் காதலன் விடுதலையாகி விடும் சந்தோஷமும் உச்ச நிலையில் இருக்கிறதெனினும் தன்னுடைய உடன் பிறந்தோனின் செய்கையையும், அவனுக்கு நேரப்போகும் கதியையும் நினைக்க அவளால் வருந்தாமலிருக்கமுடியவில்லை. இரு வித உணர்ச்சிகளுடன் சாய்ந்துவிட்டாள்.

22-வது அதிகாரம்

வைரம் என்றும் வெறுங் கல்லாகாது

சிறைச் சாலையிலிருக்கும் மோஹனனுக்கு அங்குள்ள மற்ற கைதிகளின் நடத்தையோ பேச்சோ ஒன்றமே பிடிக்கவில்லை. இவன் தூக்கு போடப்பட வேண்டியவனுகையினுல் இவனைத் தனிக் கொட்டடியில் போட்டு வைத்திருக்கிருர்கள். இவன் தன் பழங்காலத்துக் கதைகளை எல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணுகியபடியே சதா பகவானைத் தோத்திரம் செய்வதும்,தனக்குத் தெரிந்த தோத்திரப் பாடல்களைப் பாடுவதுமாகவே இருக்கிருன்.

இவன் மனமுருகிப் பாடும் சமயம் அங்குள்ள சில கைதிகள் கும்பல் கும்பலாக வந்து நின்று இவனை நோக்கி ''தே! பாட்டென்னடா பாட்ரே...ரவெ நேரம் பேசலாண்டா!'' என்று இவனைத் தொந்தரவு செய்து கேலிக் கிழுப்பார்கள். இவர்களிடம் பேச்சுக் கொடுக்கவே மோஹன் விரும்பமாட்டான். தன்போக்காகப் பாடிக்கொண்டே இருப்பதையே பெரிதும் விரும்புவான். ஒரு தினம் அவன் மனம் உருகி பாடிக்கொண்டிருக்கையில்,சில கைதிகள்

ஏதோ ரகஸியமாகப் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் இரண்டொன்று மோஹனனின் செவியில் விழுந்தவுடனே அவன் அந்த வார்த்தையைக் கவனிக்கத் தொடங்கினன். அவனுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா வென்று வியப்புக் கடலில் மூழ்கினன். இதைப்பற்றி வெகு நேரம் தனக்குள் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான். என்றும் அந்த ஒண்டிக்கொட்டடியின் ஒரு மூலையில் படுத்திருப்பவன் அன்று கதவினருகிலேயே நின்றுகொண்டு யாரையோ ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அன்று வழக்கம் போல ஜெயிலர்; வந்தார். என்றுமில்லாது மோஹன் நின்றிருப்பதைக் கண்டு அவருக்கே ஆச்சரியம் உண்டாகியது.

மோஹனே அவரை நோக்கி "ஐயா! நமஸ்காரம். தங்களுடைய வருகைக்கே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்." என்ருன். ஜெயிலர் வியப்புடன் "என்ன விசேஷம்! எதற்காக என்னை எதிர்பார்க்கிருய்?" என்று கேட்டார்.

மோஹ :—ஐயா! அருகில் யாருமில்லையே—யாராவது இருந்தால் வெளியே போகச் சொல்லுங்கள். ஒரு பரம ரகஸியமான விஷயம் கூற வேண்டும்.

ஜெயிலர் :—ஒருவருமே இல்லை. என்ன விஷயம் தெரிவி— என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டார்.

மோஹ :—ஐயனே! நான் பரம ஏழையாயினும் சத்தியம் நியாயம் இவைகளை என்றும் வழுவாதவன். அக்ரமத்தைச் செய்துவிட்டு வந்திருக்கும் கைதிகளைத் தண்டிக்கவே இந்த இடம் ஏற்பட்டிருக்கிறது. தண்டனையடைந்த இடத்திலும் தண்டனையடையக்கூடிய வேறு காரியத்தைச் செய்ய சித்தமாயிருப்பதை நினைக்கவே பயமாயிருக்கிறது. அதோடு வேலியே பயிரை யழிப்பதுபோன்று அவர்களைக் காப்பதற்காக நியமித்திருக்கும் வார்டரே உடந்தையாயிருப்பது காண மனம் பதறுகிறது.

ஜெயிலர் :—என்ன மோஹன்! நீ கூறுவது ஒன்றுமே விளங்கவில்லையே...என்ன நடந்தது சீக்கிரம் கூறு.

மோஹ :—ஐயனே! இங்குள்ள சில கொலைக்குற்றக் கைதிகளும் திருட்டுக் கைதிகளும் குப்பன் என்ற வார்டரைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவனுக்கு ஏதோ பணங் கொடுப்பதாக கூறிச் சரிப்படுத்திவிட்டார்கள். அவன் முதலில் தியங்கினான். அவனைக் கொன்றுவிடுவேன். என்று பயப்படுத்தி மிரட்டியதால் அவன் காலக்கொடுமையினால் ஒப்புக்கொண்டுவிட்டான்.இன்றிரவு லாக்கப்பு சரியாகச் செய்யாது அவர்களைத் தப்ப வைத்துவிடப்போகிறானும். அவர்கள் வெளியில் சென்று உங்கள் வீட்டிலேயே கொள்ளையடித்து உங்களையும் கொலை செய்துவிட்டு உங்கள்மீதுள்ள வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளப்போகிறார்களாம்.

இவைகளை அவர்கள் குசுகுசுவென்று பேசும்போது நான் கேட்டுவிட்டேன். ஐயனே! இந்த கொலைப் பாதகர்களைக் கவனித்துக்கொள்வதோடு நீங்களும் தப்ப வழி செய்துகொள்ளவேண்டும்—இதைத் தெரிவிக்கவே உங்களை எதிர்பார்த்தேன்.'' என்று மிக்க பய பக்தி வணக்கத்துடன் கூறினான். இந்த விஷயம் ஜெயிலரை ப்ரமித்துத் திடுக்கிடச் செய்தது. "மோஹன்! இது உண்மையான விஷயமா?'' வென்று பன்முறை கேட்டார்.

மோஹ :—தாங்கள் வேண்டுமாயின் இன்று இரவு வெகு ரகஸியமாக இதைக் கவனியுங்கள். உண்மை உங்களுக்கே புலனாகும். நீங்கள் இப்போதே இதை வெளியிட்டுவிட்டால் எல்லோரும் ஜாக்ரதையாகிவிடுவார்கள். ஆதலால் நீங்கள் முற்றிலும் பழய மாதிரியாகவே நடந்துகொண்டு வார்டரையும் கைதிகளையும் கையும் மெய்யுமாய்ப் பிடிக்க வழி செய்யுங்கள். அப்போதுதான் சரியான படி பிடிக்க முடியும்—என்றான்.

இதைக்கேட்ட ஜெயிலருக்கு ஒரு புறம் ஆத்திரமும்,ஒரு புறம் மோஹனும் ஓர் குற்றவாளியாகவிருந்தும் அவனுடைய உயர்தரமான உத்தம குணத்தழகைக் கண்டு ஆச்சரியமும் உண்டாயிற்று. "இவனும் ஓர் கைதியாயிற்று. இந்த ரகஸியத்தை யறிந்த உடனே தானும் அவர்களுடன் தப்பியோடும் வழியையன்றோ கைதியாகிய இவன் தேடவேண்டும். இவன் முன்னெச்சரிக்கையாய் நமக்காகக்

காத்திருந்து கூறும் ஆச்சரியத்திற்கு என்னென்பது? இதுவே இவனுடைய உத்தம குணத்தையும், இவன்தான் நிரபராதி என்று கூறுவதையும் மெய்ப்பிக்கவில்லையா! உம். நல்லவர்களைத்தான் விதி நன்றாக ஆட்டுகிறது'' என்று தனக்குள் எண்ணமிட்டவண்ணம் சற்று மவுனமாக நின்றார்.

பிறகு மோஹனை நோக்கி "மோஹன்! இதை நான் இன்று கவனிக்கிறேன். நீ இந்த உண்மையைக் கூறி என்னை ஜாக்ரதைப் படுத்தியதற்காக நான் மிக்க மகிழ்ச்சியுடன் நன்றி செலுத்துகிறேன். பிறகு உன்னைப் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு வழக்கம்போல வார்டரை சுற்றிப் பார்த்துக்கொண்டே போய்விட்டார்.

அன்று மாலையே சில போலீஸ்காரர்களுக்கு விஷயத்தைத் தெரிவித்து அவர்களை வரவழைத்துத் தம் வீட்டில் சிலரையும் ஜெயிலைச் சுற்றிச் சிலரையும் ரகஸியமாகவே காவல் போட்டுவிட்டதோடு, தான் படுக்கும் படுக்கையில் தலையணைகளை வைத்து போர்வையினால் போர்த்தி மனிதன் படுத்திருப்பதுபோலச் செய்துவிட்டதோடு தன் மனைவி, மக்களை வேறு இடத்திற்கு அனுப்பிவிட்டார். சகல ஏற்பாடுகளும் வெகு ரகஸியமாகவே நடந்துவிட்டன.

குப்பன் என்ற அந்த வார்டர் வழக்கம்போல லாக்கப்பு செய்துவிட்டு சாவியை ஜெயிலர் வீட்டில் வைத்துவிட்டான். அன்று இரவுக் காவல் அந்த வார்டருடையது; ஆகையினால் ஜெயிலுக்கு வந்துவிட்டான். இதற்குள் ஜெயிலர் ஓர் வார்டரின் உடையைத் தானணிந்து அடியோடு உருவத்தை மாற்றிக்கொண்டு குறிப்பிட்ட கைதிகள் உள்ள லாக்கப்பின் அருகில் வந்து ஒருவரும் அறியாதபடி சாமர்த்தியமாக இருட்டில் கைதிகளுடன் பேச்சுக் கொடுத்தபடியே கவனித்துவிட்டார். மோஹன் கூறியதுபோல பூட்டை பூட்டாமல் பூட்டி இருப்பதுபோல மாட்டி இருந்தது கண்டு மிக்க ஆச்சரியமும், மோஹன் கூறியதில் நம்பிக்கையும் கொண்டு இதை போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தார்.

நடுநிசி சுமார் 1 மணி இருக்கும். 5 கைதிகள் மட்டும் அவர்கள் லாக்கப்பை விட்டு குப்பனால் விடுவிக்கப்பட்டார்கள். தினம்

குப்பை வாரிக் கொட்டும் வண்டி போன்றுள்ளதை ஜெயிலிலிருந்து வெளியில் தள்ளும் வழியிருக்கிறது. அதுவும் பூட்டாதிருந்தது. அதே வழியில் 5 பேர்களையும் உட்கார வைத்து வார்டர் வெளியில் அனுப்பிவிட்டான்.

இந்த விஷயங்களை மறைந்திருந்து ஜெயிலரும், போலீஸாரும் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். 5 பேரும் வெளியில் வந்ததும் ஒரு மூலையில் பதுங்கிப் பதுங்கி ஜெயிலர் வீட்டிற்கு இருவர் சென்றார்கள். மூவர் ஓர் மரத்தடியில் உட்கார்ந்தார்கள். இருவர் ஜெயிலர் வீட்டிற்குச் சென்றதும் சில போலீஸார் பின்புறமாக வந்து மூவர் ஓடிவிடாதவாறு அவர்களை சடக்கெனப் பிடித்துக் கைகால்களில் விலங்கை மாட்டி கூச்சலிடாதவாறு வாயைக் கட்டி விட்டார்கள்.

இந்த சம்பவம் அவர்களை உயிரே போகும்படிச் செய்து விட்டது. தத்தளிக்கின்றார்கள். அங்கிருந்து சென்ற இருவரும் ஜெயிலர் வீட்டுச் சுவரேறி குதித்து உள்ளே சென்று குப்பன் சொல்லிய அடையாளப்படிக் கட்டிலருகில் சென்று பார்த்தார்கள். துணியால் போர்த்தி இருந்த தலையை ஜெயிலர் என்று எண்ணித் தன் கையிலிருந்த பீச்சாங்கத்தியினால் ஒருவன் ஓரே குத்து குத்தினான்.

ஆனால் கத்தி மனிதன்மீது பாய்வதும், பஞ்சுத்தலையணையில் பாய்வதும் இவர்களுக்குத் தெரிந்துவிட்டது. போர்வையை விலக்கிப்பார்த்து ப்ரமித்து கதிகலங்கி நிற்கும் சமயம் போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஜெயிலரும் உயரவிருந்து தபீரென்று கீழே குதித்து இவர்கள் காலில் குறிபார்த்துச் சுட்டுவிட்டு "அடேய்! நான் இதோ இருக்கையில் தலையணையைக் குத்திவிட்டீர்களே! ஆள் கூடவா தெரியவில்லை. கொலைகாரப் பாதகர்களே! இத்தனை வருடம் தண்டனையடைந்து வருந்திய பிறகும் கை கூசாது கொலை செய்யத் துணிந்த நீங்கள் ஆதியில் கொலை செய்துவிட்டு வந்தது ஓர் வியப்பா! பேஷ்! குப்பனின் உதவியாலல்லவா இத்தனையும் செய்தீர்கள்? தக்க பலன் உங்களுடன் அவனுக்கும் தாராளமாய்க்



கிடைக்கும்'' என்று அவர்களை மனம்போனவாறு திட்டியபடி இழுத்துக்கொண்டு மற்ற மூவருடன் நிறுத்தினார்கள்.

5 பேரும் திருகத் திருக விழிக்கையில் உள்ளே இருந்த குப்பனும் இவர்களுடைய செட்டில் சேர்க்கப்பட்டான். இந்த சம்பவங்களை நேரில் பார்த்தபிறகு மோஹன்மீது ஜெயிலருக்கும் மற்ற போலீஸாருக்கும் உண்டாகிய இரக்கம் கூறத் திறமில்லை. "இத்தனை உத்தம குணம் படைத்தவனா கொலை செய்திருப்பான்! அவன் சொல்வதேபோல் அவன் நிரபராதியாகத்தானிருக்கலாம். ஏதோ சந்தர்ப்ப சாக்ஷியும், பகைவர்களின் சூஷாத்திரமும் அவனை இம் மாதிரி செய்துவிட்டன'' என்று அனுதாபப்பட்டார்கள்.

அந்த நடு நிசியிலேயே எல்லோரும் மோஹனிடம் ஓடி வந்து "அப்பா! மோஹன்! உன்னுடைய பரம தயாள குணத்தையும், மேன்மையான புத்தியையுங் கண்டு பரவசமடைகிறேன். நீ இதைக் கவனித்துச் சொல்லாதிருந்தால் நான் இன்னேரம் சவமாகக் கிடப்பேன்; என் குடும்பமே சிதறுண்டு போயிருக்கும்...மோஹன்!... நீயும் ஓர் கொலைக்குற்றத்திற்காக தூக்குமேடை ஏறப்போகும் நாளை எதிர் பார்த்திருக்கும் கைதியாயிருந்தும் நீயும் அவர்களுடன் தப்பியோடிவிட வழி செய்யாமல் என்னைக் காத்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்ததை நான் என்றுமே மறக்கமாட்டேன். கடவுள் உனக்கு க்ருபை செய்து நீ செய்திருக்கும் அப்பீலில் உனக்கு ஜெயங் கொடுக்கவேண்டுமென்று என் வீட்டில் என் மனைவியும்,என் குழந்தைகளும் கடவுளை ப்ரார்த்தனை செய்துகொண்டிருக்கிறார்கள். நீ என்னுயிரையும் என் குடும்பத்தையும் காப்பாற்றியதற்குக் கடவுள் உன்னுயிரைக் காக்க அவனடி தொழுகின்றேன். நான் காலையில் வந்து உன்னை பார்க்கிறேன்." என்று அவனுக்குக் கை குலுக்கி விட்டுச் சென்றுவிட்டார்.

மோஹனின் உள்ளம் கரை புரண்ட சந்தோஷத்தினால் மலர்ந்தது. ஒரு உயிரைக் கடவுள் காப்பாற்றிய அற்புதம் அவனை அக மகிழச் செய்தது. ஏற்னெவே தூக்கமில்லாத மோஹன் அன்று அசலே தூங்கவில்லை. ராஜத்தின் நினைவு ஒரு புறம். தன்னுருயிர்த் தாயின் உருவமும் அன்பும் ஒரு புறம் பாதித்தவாறு இரவை யோட்டினான்.

பொழுது புலர்ந்ததும், ஜெயில் ஒரே குழப்பமும் கலபையுமாயிருக்கிறது. ராத்திரி கைதிகள் தப்பியதையும், மீண்டும் பிடிபட்டுஅவர்கள் தனித்தனியே கைகால் விலங்குகளுடன் ஒண்டிக் கொட்டடியிலிருப்பதையும் கண்டு கைதிகளே பேசுவது வெகு பரபரப்பாகவிருந்தது. ஒண்டிக்கொட்டடியில் அடைபட்டிருக்கும் மோஹன் தன் வழக்கப்படியே ராமலிங்கஸ்வாமி பாடலை பாடிக் கொண்டே இருக்கையில் சில கைதிகள் அங்கு வந்து "ஏம்பா! இப்பகூட என்ன பாட்டு! ராத்திரி ஏதோ பெரிய கலாட்டா நெடந்துச்சாமே...ஒனக்குத் தெரியாதா! செயில்லெ அல்லகல்லோல

படுதே'' என்று இந்த கதையை அவனிடம் கேட்டுக்கொண்டு வந்தார்கள். மோஹன் அவர்களுக்கு முகங் கொடுக்காமல் ''ஐயா! அவரவர் விதியை அவரவர் துலைக்கிறார்கள். உங்கள் விதியை நீங்கள் துலையுங்கள். என் விதியை நான் துலைக்கிறேன். நீங்கள் வீணாக என்னிடம் பேச்சுக் கொடுக்கவேண்டாம் போங்கள்'' என்றான்.

அவர்களுடன் கூடவிருந்த சற்று வயதான ஒருவன் ''ஏம்பா! எந்த வேளை பார்த்தாலும் பாடிக்கொண்டே இருக்கிறாயே...உன்னைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக விருக்கிறது. நீ யாரைக் கொலை செய்துவிட்டு வந்துவிட்டாய்?'' என்றான்.

மோஹ:—ஹா...ராமா! ராமா!...நான் யாரையும் கொலை செய்யவில்லை. ஐயா! என் விதிதான் என்னைக் கொலை செய்யப்போகிறது. உங்களுக்கு ஏன் இந்த வீண் வார்த்தை? நீங்கள் போங்கள்...

கைதி:—இதோ போய்விடுகிறேன்...நான் மகா பாவி. கையும் மெய்யும் துணிந்து கொலை செய்த பாதகனாகிய எனக்கே கஷ்டமாயிருக்கிறதே..நீயோ நிரபராதி என்கிறாய். உன்னிலைமை எப்படித்தானிருக்குமென்று நினைக்க கபீரென்கிறது. நான் சண்டாளன்...

மோஹ:—ஐயோ! உங்கள் பெருமை எனக்கு வேண்டாம்... கொலைப் பாதகம் செய்த உங்களைப் பார்த்தாலும் பாபம் சூழ்ந்து கொள்ளும். அடுத்த பிறவிக்காவது பகவானை பஜித்துப் புண்ணியம் தேடும். உம்மால் மாளப்பட்ட உயிர்களின் வதையும் சாபமும் உம்மை விட்டு விலகும்படித் தவம் செய்யும்.

கைதி:—ஹா...என்னால் கொல்லப்பட்ட உயிர் ஒன்றல்லவே! ...எனக்குத் தெரிந்து இரண்டு; மூன்றாவதும் முடிந்திருக்குமென்றுதான் நினைக்கிறேன். அக் கால சம்பவங்கள் என்னைப் பிடித்து ஆட்டுகிறதே...அந்த உயிர்களின் சாபமும், அச் சிசுவின் சாபமும் என்னை விடுமா...

மோஹ:—என்ன...சிசுவையா நீர் கொலை செய்தீர்...நகைகளுக்கு ஆசைப்பட்டுக் கொன்றீரா...ஐயோ...

கைதி:—இல்லையப்பா! என் கதைகளைக் கேட்டால் காரியுமிழ் வாய். என்னைப்போல கண்ணியமாய்ப் பிழைத்தவர்கள் யாருமே இல்லை. என்னைப்போல சீரழிந்தவர்களும் இனி இருக்கப்போவ தில்லை. மகா உத்தமி. கண்ணுக்குக் கண்ணான மனைவி—மகா லக்ஷ்மிபோன்ற மனைவி—கல்யாணி என்றால் அவளுக்கே தகும். அத் தகைய கல்யாணிக்கு த்ரோகம் செய்து ஓர் பால்காரியின் கற்பை யழிக்க முயன்றேன். அவள் பூர்ண கர்ப்பிணியாயிருந்தாள்......

என்று அவன் ஆரம்பிக்கும்போது மோஹனைத் தூக்கி வாரிப்போட்டு திடுக்கிடச் செய்தது. கல்யாணி என்ற பெயரும், பால்காரி பூர்ண கர்ப்பிணி என்ற வார்த்தைகளும் செவியில் பட்ட தும் ஒரு காலத்தில் தனது பிறவிச் சரிதையின் ரகஸியத்தைக் கல்யாணியம்மாள் தனக்குக் கூறியது முற்றும் தன் கண் முன்பு தோன்ற வாரம்பித்தது. அவனுடைய நிலையே கலங்கியது. அந்த விஷயந்தானா?...அதை முற்றிலுமறிய எண்ணி "மேலே என்ன நடந்தது" என்று கேட்டாள்.

கைதி சகல விவரங்களையும் கூறினாள். (இது வாசகர்க ளறிந்த விஷயமாகையினால் விஸ்தரிக்கவில்லை) இவனே தன் பெற் றோர்களை விழுங்கி ஏப்பம் விட்ட காளகோடி விஷம்...இவன் தன் பெற்றோருக்குக் காலனாகிய மனிதன் என்று நன்றாக விளங்கிவிட் டது "ஹா...அந்த பாதகன் நீதானா...ஐயா! இரண்டு உயிர்கள் தாம் உனக்கு பலியாகியது! மூன்றாவது உயிராகிய சிசுவாயிருந்த நான் அப்போது உனக்குப் பலியாகவில்லை. இப்போதுதான் என் வினைக்குப் பலியாகப்போகிறேன்" என்று கூறுவதற்குள் கைதி "என்ன! என்ன அந்த பால்காரியின் மகனா நீ...ஹா! விதியே! விதியே!!" என்று கூவியவாறு தம்பித்துவிட்டான். மோஹனும் கலங்கிக் குழம்பி சோகப்பதுமை யாகிவிட்டதால் இருவரும் மவு னமே வடிவாகிவிட்டார்கள்.

23-வது அதிகாரம்

இன்ப வனத்தில் அன்பு மலர்கள்

உலகத்தில் மக்களுக்கு அவ்வப்போது அந்தந்த கால தேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி உணர்ச்சிகளையும் சுக துக்கங்களையும் உண்டாக்குவது இயல்பல்லவா! நமது ராஜலக்ஷ்மிக்குத் தன் துயரம் தீரப் போகிறதா என்று ஏங்கிய நிலையில், கடவுளின் கிருபையினால் தன் துயரம் தீர்ந்து கட்டு மீறிய சந்தோஷச் செய்தியினால் ஒரு துள்ளு துள்ளும் சமயம், உடன் பிறந்த—ஒரே ரத்தக் கலப்புள்ள—சகோதரனின் கதியை நினைக்க மிக்க விசனமும் உண்டாகியது......வினை விதைத்தவன் வினையை அறுவடை செய்துதானே தீரவேண்டும்...

சங்கரா......விஷயம் எப்படி இருக்கிறது கேட்டாயா!...நாம் நாகலிங்கத்தையல்லவா எண்ணினோம்...என்பதற்குள் சங்கரன் அதிகமான வியப்புடனும், பரம சந்தோஷத்துடனும்...“அம்மணீ! நான் உங்களிடம் கூறவன்றோ ஓடோடியும் வருகிறேன். நான் இப்போதுதான் கிழவியின் வீட்டிற்கு வழக்கம்போலச் சென்றேன்.

ஆகா! முன்பு கிழவியின் பரிதாபத்தைக் கண்டு சகிக்கமாட்டாது எப்படிப் புலம்பினேனோ, அப்படி இப்போதுதான் கிழவி ஏகாம்பரத்தின் மூலம் விஷயங்களை அறிந்து சந்தோஷ சாகரத்தில் மூழ்கி தன்னை மீறிப் பொங்கும் ஆநந்தக் கொந்தளிப்பில் இருக்கும் சம்பவத்தைக் கண்டு உள்ளம் பூரித்தேன். அபாரமான களிப்பும் மகிழ்ச்சியும் அடைந்து தங்களிடம் தெரிவிக்க ஓடி வருகிறேன். அம்மணீ! உங்கள் பங்கில் கடவுள் இருந்து காப்பார் என்று நான் கூறவில்லையா!...என்று அபரிமிதமான சந்தோஷத்துடன் கூறினான்.

ராஜம் :—என்ன சங்கரா! சந்தோஷம் ஒரு புறம் எனக்குண்டாகிய போதிலும், உடன்பிறந்தவனின் கதி உள்ளத்தை யுருக்குகிறதே......பெற்ற பிள்ளேயே இவ்விதம் செய்தான் என்பதை யாராகிலும் நம்புவார்களா! என் பிறந்த வீடு அடைந்த கதியை எண்ண வயிறு பற்றி எரிகிறதே...சங்கரா...என்ன செய்வேன்... கிருஷ்ணன் என்னே அடித்துத் துரத்தியபோதிலும் அவனேப் பார்க்கவேணும்போல என் மனம் ஆவல் கொண்டு அலேகின்றதே. அங்கு சென்ருல் அவன் என்னே என்ன நினேப்பானே! என்ன சொல்வானே! என்ன செய்வானே! தெரியவில்லேயே. சங்கரா! என்ன செய்வேன் சொல்லு.

சங்க :— அம்மணீ! மகா ப்ரபுவாய் விளங்கிய தர்மலிங்கத்தின் வயிற்றில் பிறந்து அருமையான புத்தியுடன் ப்ரகாசிக்கும் உங்களுக்குமா நான் கூறவேண்டும். தாயே! பாசம் சற்று ஊசலாடுவது உண்மையே! எனினும் நன்மையும் தீமையும், நியாயமும் அனியாயமும் மத்தியிலில்லேயா! அந்த மகா ப்ரபுவின் வயிற்றிலேயே பிறந்து அவரையே கொள்ளேயடிக்கத் துணிந்து சூழ்ச்சி செய்த சண்டாளனுக்கு இனி பரிவதா! அம்மா! உண்மையில் மோஹன் குற்றவாளி யல்ல வென்பதை நீங்கள் கடவுளறிய அறிந்திருப்பதால் இத்தனே வருத்தமும்,பாடும் பட்டீர்களேயன்றி அவரும் உண்மையில் குற்றம் செய்தவராக விருப்பின் நீங்கள் வருந்துவீர்களா?

ராஜம் :—சங்கரா!...ஆம்; ஆம்...நீ சொல்வதேபோல நான் அவருடைய நிரபராதித்தன்மையை அறிந்ததனுல் என்னே மீறி சிந்தித்தேனே யன்றி அவர் குற்றவாளி என்றது உண்மையாக விருப்பின் அக்ஷணமே அவரை நான் எனது உயிர்க் காதலனுக மதியாமல் பரம வைரியாக எண்ணி இருப்பேன். என்னேயே நான் தியாகமும் செய்துகொண்டிருப்பேன். கனவிலும் கருதாத விதம் இந்த கிருஷ்ண னுக்கு இப்படி புத்தி கெட்டுவிடுமா என்ற விசனந் தான் தாங்க முடியவில்லே.

சங்கரா! அவன் என்ன நினேத்தாலும் சரி. நான் அவ்விடம் சென்று பார்த்துவிட்டே வருகிறேன். நீயும் வா...மரகதம்! புறப்

படு. என் மனமடங்கவில்லை.'' என்று கண்ணீர் விடுத்தபடியே கிளம்பினாள். அப்போது இராக்காலமாகையினால் இருள் சூழ்ந்திருந்தது. மூவருமாக தர்மலிங்க ப்ரபுவின் வீட்டிற்குச் சென்றார்கள். அவ் வீட்டைப் பார்க்கும்போதே ராஜத்தின் மனம் கொதித்தது.

வீதியில் இரண்டு போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள் அவர்களைக் கண்டதும் ராஜம் திடுக்கிட்டுப்போய் விழித்தாள். இதற்குள் சங்கரன் அவர்களை விசாரித்ததில் ''வீட்டிலிருப்பவர்களைக் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள். வீட்டை சோதனை போட்டதில் அன்று களவு போன நோட்டுக்களில் சில பெரிய நோட்டுக்கள் கிருஷ்ணன் பெட்டியிலேயே கிடைத்துவிட்டன. இன்னும் சில முக்கியமான சாட்சிகளும் கிடைத்துவிட்டதால் குற்றவாளி இவர்களே என்று தீர்மானித்தாகிவிட்டது.'' என்ற தகவல் தெரிந்தது.

இனி என் செய்வாள் பாவம்! ராஜம் புழுபோலத் துவண்டு போய்விட்டாள். அந்த இடத்தைப் பார்க்கும்போது பழய நினைவுகளெல்லாம் வந்து அவளை முற்றிலும் கலக்கி அபாரமாக வருத்துகின்றன. தான் குழந்தைப் பருவம் முதல் இன்றுவரையிலிருந்த சம்பவங்கள் கண் முன்பு காட்சி கொடுப்பதால் அவ் விடத்திலேயே அவளால் அதற்குமேல் நிற்க முடியவில்லை. உடனே சங்கரன் வீட்டிற்கே போய்விட்டாள்.

நாகலிங்கத்திற்கும் இந்த கொடுமையான ரகஸ்யம் தெரியாதாகையினால் இவை வெளியானதும் அவனே ப்ரமித்தான். பெற்ற தந்தைக்கு சொந்த மகனே இத்தகைய கொடுமை நினைத்திருந்ததை, கொடிய எண்ணமுடைய நாகலிங்கமும் வெறுத்தான். ''நான் ராஜத்தை மணந்து இந்த சொத்தில் பெரும் பாகத்தை நேர்மையான முறையில் அடைய எண்ணியது எல்லாம் அலங்கோலமாகப் போனதுடன் நம்மையும் இந்த கூட்டத்தில் சம்பந்தப் படுத்துவார்கள்போலிருக்கிறதே! என்ன அனியாயம்! அந்தப் பாவி கிருஷ்ணன் கொடுத்த உத்ஸாகத்தினால் என்னுடைய ஆவல் அதிகரித்து அவனை நம்பியதற்குப் பலன் இதுவா?......

ராஜத்தை என்று வீட்டைவிட்டுத் துரத்தினனே அன்றே எனக்கு இந்த கிருஷ்ணனைக் கண்டால் பிடிக்கவில்லை. கடைசியில் கிணறு வெட்ட பூதம் கிளம்பியதே! ஆம்;...இருக்கும் நிலைமையைப் பார்த்தால் நம்மையும் சந்தேகிப்பார்கள்போலவிருக்கிறது. நாமோ கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டோம். உடனே ராஜத்தினிடம் சென்று அவளிடம் நான் செய்த குற்றத்திற்கு மன்னிப்பு பெற்றுக்கொண்டு வரவேண்டும்.'' என்று தோன்றியதால், உடனே சங்கரன் வீட்டிற்கு வந்தான்.

அப்போதுதான் ராஜம் தன் வீட்டிலிருந்து மிக்க விசனத்துடன் வந்து படுத்துப் புலம்பிக்கொண்டிருந்தாள். அதே நிமிடம் நாகலிங்கம் மிக்க விசனத்துடன் ராஜத்தின் முன்பு தோன்றி "அம்மணி! என்னை மன்னிக்கவேண்டும்...நான் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்று நினைத்துவிட்டார். இம் மாதிரி நேருமென்று நான் கனவிலும் கருதவில்லை. நான் எட்டாக் கனிக்குக் கொட்டாவி விட்டுக் காத்திருந்தேனேயன்றி சத்தியமாக உங்கள் பிதாவிடம் எனக்கு ஒரு சிறிதும் த்வேஷமில்லை.

அந்த மகானுபாவர் என்னை நம்பும்படிக்குச் செய்துவிட்டுப் பிறகு நான் உங்களையடையஎண்ணிய துர்ப்புத்தியினுல் உங்களுக்கும் மோஹனுக்கும் இருந்த உண்மைக் காதலின் மகிமையை அறியாது மூடமானேன். மோஹன்மீது உங்கள் தந்தைக்கு வெறுப்பேறும் படிக்குச் செய்துவிட்டால் பிறகு எனக்கு நீங்கள் கிடைத்துவிடுவீர்கள் என்கிற பேராசையினுல் அந்த ஒரு குற்றம் மட்டும் செய்தது உண்மை. அதனுல் இத் தகைய விபத்து நேரும் என்று நான் நினைக்கவே இல்லை. என் பேராசையால் நானே கெட்டேன். மோஹன்மீது த்வேஷத்தை உண்டாக்கி அவனை வேலையை விட்டுத் துரத்திய பாவம் என்னையே அடித்தது. அதற்கும் அந்தப் படுபாவி கிருஷ்ணனும் சேர்ந்ததால்தான் நான் அத்தனை கொடியவனுனேன்...என்னை மன்னிக்கவேண்டும்.'' என்று மிகவும் பரிதாபத்துடன் கேட்டான்.

இதுகேட்ட ராஜம் உண்மையில் வியப்புற்றுள். நாகலிங்கமும்

இப்படி வந்து கேட்பான் என்று எதிர் பார்க்கவே இல்லையாதலால் அவனை நோக்கி "மிஸ்டர் நாகலிங்கம்! விதி யாரை விட்டது? பெரிய பெரிய மகான்களை எல்லாம் விடவில்லை என்றால் நாம் எம்மட்டும்! என் வினை என்னை யாட்டியது. அதற்கு உங்கள் மீது குற்றமென்ன? முதலில் தாங்கள் மோஹன் மீது வைத்த வத்திதான் இவ்வளவு தூரம் கொண்டு வந்துவிட்டது. ஏதோ கடவுள் ஒருவர் இல்லையா... என்று பிடி கொடுக்காது சலிப்பாய் பேசினாள்.

இதற்குள் சங்கரன் அவளுடைய மனோ வேகத்தை யறிந்து கொண்டு "ஐயா! இப்போது கொழந்தை மிகவும் வாடிப்போயிருக்கிறது. அதோடு அதிகம் பேசவேண்டாம். சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும். தயவு செய்து நீங்கள் எழுந்து போங்கள்." என்றான். நாகலிங்கமும் பேந்தப்பேந்த விழித்துக்கொண்டு போய் விட்டான்.

* * *

முன்னதிகாரத்தின் இறுதியில் கூறியபடி திகைத்து நின்று விட்ட கைதியும், நமது மோஹனும் ஒருவரையொருவர் பார்த்து இன்னதென்று கூறமாட்டாத தனித்தனி உணர்ச்சியுடன் விழிக்கின்றார்கள். தன்னால் கொலை செய்யப்பட்ட உத்தமியின் கருவிலிருந்த மகன் இவனே என்பதைத் தெரிந்ததும் அம் மனிதனுக்குப் பழைய நினைவுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்முன்பு தோன்றி வதைக்கின்றன.

அடுப்பில் பொங்கும் பாலைக் கைதுணிந்து எடுத்துக்கொட்டியதும், அப்போது அம் மனிதன் துடிதுடித்ததும், அம் மாதரசி கண்கலங்கியதும்,தன் மனைவி ஆவேசத்துடன் வந்ததையும் எண்ணி துடித்தவாறு..."ஹா...வாலிபனே! இனிமேல் நீ என் முகத்தில் விழிக்கவும் ப்ரியப்படமாட்டாய். உன் பெற்றோர்களின் வாழ்க்கையை நாசம் செய்த மகா கொடிய பாவியாகிய நான் இனிமேல் இங்கு நிற்கமாட்டேன்; இதோ போய்விடுகிறேன்.

அப்பா! ஒரே ஒரு வார்த்தைமட்டும் கேட்க ப்ரியப்படுகிறேன். என்;மனைவி என்று கூறும் பாக்யம் பெற்றிருந்த பதிவ்ருதா ரத்தின

மாகிய கல்யாணி உயிருடனிருக்கிருளா! உனக்குத் தெரியுமா! உன்னை யார் எடுத்து வளர்த்தார்கள்?'' என்று கல்லும் கரைந்துருகும்படி கண்ணீர் பெருகக் கேட்டான்.

மோஹன்:—ஐயா! என்னுல் இப்போது பேசவே முடியவில்லை. என்னை ஏதோ சோகம் தலை தூக்க விடாது சித்திரவதை செய்கின்றது. கடவுள் என்னைப் படைக்கும்போதே கல்யாணியம்மாளேயே எனக்குத் தாயாகப் படைத்துவிட்டதால் அந்தம்மாள்தான் என்னை வளர்த்து வருகிருர்கள். அந்தம்மாளால்தான் இந்த உயிர் தரித்திருக்கிறது. அத்தகைய உத்தமியின் வயிறெரியச் செய்த உம்முடைய கதை முற்றிலும் நான் அறிவேன்...

இதற்குள் ஜெயிலதிகாரியும், ஏகாம்பரமும் வெகு சந்தோஷத்திஞல் மலர்ந்த முகத்துடன் அங்கு வருவதைக் கண்ட பழைய கைதி ஓடிவிட்டான். ஏகாம்பரத்தின் சந்தோஷத்தைக் காண மோஹனின் மனத்திலும் அவனை மீறிய சந்தோஷம் உண்டாகியது. அவரைக் கண்டவுடன், "ஐயனே! என் ராஜரத்தினம் சவுக்யமா? ...என் தாயார் சௌக்யமா...என்றதையே முதல் கேள்வியாகக் கேட்டான்.

ஏகா:—(நகைத்துக்கொண்டே மோஹனின் கையைப் பிடித்துக்கொண்டு) மோஹன்! நீ நிரபராதி...நீ வெகு சீக்கிரத்திலேயே உன் தாயாரையும், உன்னருமைக் காதலியையும் கண்டு களிக்கப் போகிருய். உன்னை விடுதலை செய்துவிடும்படி உத்திரவும் வந்துவிட்டது—என்று முடிப்பதற்குள், ஹா......நான் கேட்பது நினைவில் தானு......கடவுளே.........உன் கருணையே கருணை...என்று கூறி ஆநந்தக் கண்ணீர் விட்டுச் சிறிது நேரம் தம்பித்துவிட்டான்.

ஜெயிலர்:—(முதல் நாள் நடந்த விவரங்களை ஏகாம்பரத்திற்கு எடுத்துக் கூறி மோஹனனை வெகுவாய்ப் புகழ்ந்து மிக்க த்ருப்தியுடன் கொண்டாடி) "சார்! நேற்று இரவு வரையில் இவரை நான் குற்றவாளி என்றே நம்பி இருந்தேன். நேற்றுமுதல் சதா கடவுளை ப்ரார்த்தித்து இருவரது விடுதலையைக் கோரி வேண்டினேன். கடவுள் கிருபை செய்ததற்கு நான் மிக்க சந்தோஷப் படுகிறேன்.

மிஸ்டர் மோஹன்! உத்தமருக்கு முதலில் கஷ்டத்தைக் கொடுத்து சோதனை செய்தபோதிலும் உடனே தன் கருணை மாரி பொழியா திருக்கமாட்டார் என்று நாம் படித்த பக்தர்களின் சரிதையினால் விளங்குகிறதல்லவா......

மோஹன்! நான் பரம சந்தோஷத்துடன் உன்னை யனுப்பு கிறேன். வெளியே வா!'' என்றார். இதற்குள் லாக்கப்பு திறக்கப் பட்டது. மோஹன் வெளியே வந்ததும் ஜெயிலரும், ஏகாம்பரமும் அவனை மார்புறத் தழுவிக்கொண்டார்கள். மோஹன் இத்தகைய ஒரு சுப சமாச்சாரம் காதில் விழப்போகிறதென்று கனவிலும் நினைக்க வில்லை யாதலால் ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்க முடியவில்லை.

உண்மைக் குற்றவாளிகள் யார் என்பதை ஏகாம்பரத்தினால் அறிந்ததும் கூறத் திறமற்ற வியப்பும் திகைப்பும் அடைந்து "ஹா! க்ருஷ்ணனும் அவன் சகாக்களுமா குற்றவாளி...என்ன ஆச்சரியம்! ...என்ன அனியாயம்!'' என்று திகைப் பூண்டை மிதித்தவன்போல சில விநாடிகள் ப்ரமித்துவிட்டான்.

முதலில் தன் கண்ணினுமினிய தாயைப் பார்ப்பதா! கண்மணி போன்ற காதலியைக் காண்பதா! என்ற எண்ணம் உண்டாகி விட்டது. தாயைத்தான் முதலில் பார்ப்பது என்ற தீர்மானம் உண்டாகிவிட்டது. ஏகாம்பரத்துடன் அன்றைய ரயிலுக்கே புறப் பட்டு வந்து சேர்ந்தான். கல்யாணியம்மாள் கட்டுக் கடங்காத அபாரமான சந்தோஷத்துடன் ரயிலடியிலேயே வந்து காத்திருந்து மோஹனை ஆவலே வடிவாய்க் கட்டியணைத்து ஆநந்தக் கண்ணீர் பெருக்கி உச்சி முகந்து பொங்கிப் பூரித்து நிர்த்தனம் செய்கிறாள்.

பெற்றவளின் மனக் களிப்பைக் கூறவும் வேண்டுமா! இரு வரும் பித்து பிடித்தவர்கள் போலானார்கள். வாய் பேசக்கூடவில்லை. அக் கூட்டத்தில் ராஜத்தைக் காணவில்லை யாதலால் அவளைக் காணவேண்டுமென்ற வேட்கை பொங்கியது. "என் தாயே! என் னுருயிர் அன்னாய்!......உன்னுடைய ஓர் மகிமையினால்தான் நான் உயிருடன் திரும்பினேன்.'' என்றான். அதற்குமேல் பேச முடிய வில்லை.

இரவு 7 மணி சுமாரிருக்கும். சிலுசிலுப்பான காற்று வீசுகிறது. எங்கும் மந்தகாஸம் நிரம்பி இருப்பதால் உத்ஸாகமே ஒவ்வொருவரிடத்திலும் பரிபூரணமாய்க் காணப்பட்டது. ராஜம் வீதிப் பக்கத்தையே நோக்கியவளாய் எதிர் பார்த்திருந்தாள். மோஹன் வெகு ஆவேசத்துடனும், உத்ஸாகத்துடனும் ஓடி வந்து “ என் கண்மணீ! என் ராஜ ரத்தினமே......உன்னை நான் மீண்டும் காணும்படியான ஓர் பாக்கியம் பெறுவேன் என்று சொப்பனத்திலும் நினைக்கவில்லை. கண்ணே!......சென்று மறைந்ததெல்லாம் கனவின் தோற்றம் என்று மறந்துவிடு......என்று அவளிரு கரங்களையும் அப்படியே பிடித்துக்கொண்டான்.

சங்கரன் சாமானியப்பட்டவனு! ஏகாம்பரம் உள்பட எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தானும் விலகிக்கொண்டான். ராஜத்தின் மகிழ்ச்சியும் பூரிப்பும் கரை புரண்டன. சற்று நேரம் மவுனம் குடிகொண்டது......ராஜம் சற்று தெளிவு பெற்றவளாய்......“இன்று தான் நான் புனர் ஜென்மம் எடுத்தேன்......இன்றுகூட தாங்கள் வந்ததும் என்னை எங்கே அம்மணீ! அம்மா!...வென்று அழைத்து விடுவீர்களோ வென்று பயந்தேன். இன்றே என் மனங் களித்தது. நாதா! என்னுருயிர் மனமோஹன வடிவே...சில தினங்களுக்கு முன்பு வரையில் தாங்கள் தூக்கு மரத்திலும், நான் சுருக்கு மாட்டிக்கொண்டும் அவ்வுலகம் சென்றுதான் சந்திப்போம் என்று நினைத்தேன். ஒவ்வொரு விநாடியும் என் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்ததை நினைத்தால் இப்போதும் என் தேகம் நடுங்குகின்றது. நாமிருவரும் ஒரு கண நேரமாகிலும் எதிர்பார்த்த அன்போடு கனவிலேனும் களிப்புடன் சந்தித்து மகிழ்வோமாவென்று ஏங்கித் தவித்தேன். கடவுளின் கருணையினால் ஒருவாறு கூடினோம்...... அந்தோ! உங்கள் தேகம் இளைத்திருக்கும் கண்ராவியைப் பார்க்க மனம் வதங்குகிறதே....என்று கூறியபடியே மோஹனின் தோளைப் பிடித்துக்கொண்டாள்.

இது கேட்டகாலை “கண்மணி! உன் தேகம் இருப்பதைவிடவா நான் மெலிந்துவிட்டேன்! நம்முடைய ஏதோ ஒரு சக்கரம் ஒரு

ஆட்டு ஆட்டிவிட்டது. இப்படி எல்லாம் நடக்குமென்று யாராவது நினைத்தார்களா! எல்லாம் காலத்தின் கோலம்.

"என் கண்மணி ராஜம்! நான் உன்னை நேரில் பார்க்காவிடினும் உன்னுடைய மனோ வேதனையும், இதயத் தவிப்பும் எவ்வளவு உச்சத்திலிருந்திருக்கும் என்பதை என் மனம் அறியாமலில்லை. அவைகளை நினைத்து நினைத்து நான் நெருப்பின்மீது மெழுகென உருகித் தவித்தேன். கடவுளே நமது குறையைத் தீர்த்து நம்மைக் காக்கும் பொருட்டு தெய்வாம்சம் போன்ற ஏகாம்பரத்தைக் காட்டியருளினர்.

கண்ணே! அந்த புண்ணிய மூர்த்தி நம் விஷயத்தில் முயற்சி செய்யாதிருந்தால் நம் கதி என்னவாகி இருக்கும்? நம்முடைய இந்த நிலைமைக்கு அவரே காரண புருடராயும் பேசும் தெய்வமாயும் அமைந்தது நாம் செய்த பாக்யந்தான். ராஜம்! என் இன்ப வடிவே! இன்றோடு நம் சோதனை முடிந்தது என்று நம்புகிறேன். கடவுள் இனியாவது நம்மைப் பிரியாத வரங்கொடுத்துக் காத்தால் போதும். அதைத்தான் ப்ரார்த்தனை செய்கிறேன். தர்மலிங்கம் ப்ரபுவுக்கு இக் கதி நேர்ந்ததை மட்டும் என்னால் மறக்கவே முடியவில்லை. அதை நினைக்கையில் என்னை மீறி துக்கம் பாதிக்கிறது...ஊம்... எல்லாம் வேளையின் கூற்று" என்றான்.

ராஜத்தின் மனத்தில் அபாரமான விசனம் இருந்தபோதிலும் நிரபராதியான தன் காதலன் விடுதலையாகி வந்து காட்சி கொடுக்கும் ஆநந்தமே தலைசிறந்து விளங்கியது. அதே உணர்ச்சி மேலீட்டால் அகமகிழ்ந்தார்கள். அன்று வானத்தில் ஒரு சிறிதும் மாசு மருவின்றி சந்திரன் வெகு ஆநந்தகரமாய் ப்ரகாசித்து உலகிற்கு அளவற்ற ஒளியை யளிப்பதுபோன்று இக் காதலர்களின் மனதும் நிர்மலமான இன்பத்தில் மிதக்கின்றது. சந்திரனிடம் சிறிது களங்கமிருப்பது போல ராஜத்தின் உடன் பிறந்தோனின் வேதனை நடுவில் பாதிக்காமலில்லை. கட்டு மீறிய அன்புடைய காதலர்களின் களிப்பைக் கூறவேண்டுமா?...



கிழவியும் குழந்தைகளும் ஒன்ருக விளையாடி மகிழ்வதைப் பார்த்து ஆனந்தமுறுதைவிடக் காதலர்களுக்கு வேறு என்ன சுகம் வேண்டும்! இம்மாதிரியான ஆனந்தத்தைத்தான் உலகமே விரும்புகிறது.

ஏகாம்பரத்தின் செல்வப் புதல்வியாகவே ஆகிவிட்ட ராஜ லக்ஷ்மியின் விவாகம் வெகு சிறப்பாக அவரில்லத்திலேயே நடந்தேறியது. குற்றவாளிகளை சட்டப்படிக்கு தண்டித்ததோடு, உண்மைகளை உரைத்த டாக்டர் தண்டனையின்றி விடுவிக்கப்பட்டார். அன்று முதல் டாக்டர் புனர்ஜென்மம் எடுத்ததுபோலவே ஆய்விட்டார்.

பத்ரிகாலயமும், தர்மலிங்கத்தின் சொத்துக்களும் சின்ன பின்னமாய்ச் சிதறிவிட்டவைகள் மீண்டும் இக் காதல் தம்பதிகளால் புனர் ஜென்மம் எடுக்கத் தொடங்கின. பத்திரிகையை பழையபடி போல இவர்களே கவனித்து வெகு மேன்மையான முறையில் நடத்த வாரம்பித்தார்கள். இறந்தவைகளெல்லாம் புத்துயிர் பெற்று விளங்குகையில் கடவுளாகப் பார்த்து கல்யாணியம்மாளின் உத்ஸாகத்திற்குத் துணையாக சில வருடத்திற்குள்ளேயே இரண்டு பேரன்களைக் கொடுத்துவிட்டார்.

இத்தகைய அருமையான மருமகளுடனும், விலையிலா மாணிக்கம் போன்ற பேரன்களுடனும், தன்னருமை மகனுடனும் இன்பமாகவும் நித்ய கல்யாண வைபவத்துடனும் பரம சந்தோஷ பூரிதையாய் வாழ்ந்துவரும் பேரானந்தத்தைத் தவிர அவளுக்கு வேறு என்ன வேண்டும்?

கிழவியும் குழந்தைகளும் ஒன்றாக விளையாடி மகிழ்வதைப் பார்த்து ஆநந்தமுறுதைவிடக் காதலர்களுக்கு வேறு என்ன சுகம் வேண்டும்! இம்மாதிரியான ஆநந்தத்தைத்தான் உலகமே விரும்புகிறது.

ஏகாம்பரத்தின் புகழும் பெருமையும் அபாரமான ப்ரகாசத்துடன் எங்கும் பரவ வாரம்பித்தது. [இவருடைய அருமையான சாமர்த்தியத்தின் உழைப்பும், இவர் செய்துள்ள மகத்தான காரியங்களின் வைபவ லீலைகளும் இனிமேல் வரும் நமது நாவல்களில் ப்ரத்யேகமாகக் காணலாம்.] மங்களம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

" ராஜமோஹன் "

முற்றிற்று.

ஓம் தத் ஸத்.

இரண்டு புதிய நாவல்கள்

அன்பின் சிகரம் அணா 4

உடைந்த இதயம் அணா 8

ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்.

14-வது ஆண்டு

மாதாந்த நாவல் சஞ்சிகை.

ஜனவரி 1937

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8

ஜீவிய சந்தா ரூ. 25

தனிப்பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26 தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

PRINTED AT THE TATA PRESS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

ராஜமோஹன்

அல்லது

காதலின் மாட்சி

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

பிரசுராலயம்:
"ஜகன்மோகினி" ஆபீஸ்.,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

1936

காபிரைட்]

[விலை ரூ. 1/4.

ALL RIGHTS RELATING
TO THIS NOVEL
WHOLLY BELONG TO
ITS AUTHORESS

SRIMATHI

V. M. KOTHAINAYAKI AMMAL

26, CAR STREET

TRIPLICANE, MADRAS.

PRINTEE AT TATA PRESS, MADRAS. (J. C. F.)

அட்டவணை

அதிகாரம்.			பக்கம்.
1.	உத்தமத் தாயின் உயரிய அன்பு	...	1
2.	நினைத்த அளவில் மனத்தை உருக்கும்	...	7
3.	சிறுவனின் முயற்சி—பரிதாப சரிதை	....	17
4.	ஓங்கிய புகழும் ஏங்கிய மனமும்	...	27
5.	பட்ட மரத்தில் ஒட்டு மாங்கனி	...	37
6.	நிர்மல இதயம்—துர்மதி உதயம்	...	49
7.	காருண்யப் பதுமை—ஆரண்ய இதயம்	...	58
8.	உத்தம குணமே உயரிய பொக்கிஷம்	...	70
9.	கரைப்போர் கரைத்தால் கல்லும் கரையும்	...	81
10.	வறுமையின் ஆட்சியில் வருந்திடும் உயிர்கள்	...	90
11.	ப்ரேமைக் கயிற்றில் பிணைப்பட்ட மான்கள்	...	97
12.	அன்புத் தேன் மாரி—துன்ப மண் மாரி	...	109
13.	இன்பத்தின் நிழலில் எரிமலை புரண்டது	...	117
14.	முகமூடி மர்மம்—திகைத்திடும் படுகொலை	...	126
15.	பதவியின் ஆட்சி—பரிதாபக் காட்சி	...	141
16.	வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது	...	152
17.	இடியும் மின்னலும் இதயப் பிளவும்	...	162
18.	மரணத் தீர்ப்பு—மங்கையின் தவிப்பு	...	175
19.	கதி கலங்கிய வனிதை—அதிகார தேவதை	...	187
20.	நஞ்சினும் கொடிய நெஞ்சின் கடுமை	...	196
21.	உண்மை மலர்கள் உதிர்ந்த விநோதம்	...	203
22.	வைரம் என்றும் வெறும் கல்லாகாது	...	216
23.	இன்ப வனத்தில் அன்பு மலர்கள்	...	225

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

29 ரூபாய்க்கு 34 நாவல்கள்.

எழுதிய நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.		ரூ.	அ.
வைதேகி (2-பாகங்கள்)	2	8	...	2	0
ராதாமணி (2-பாகங்கள்)	2	8	...	2	0
சாருலோசனா	2	8	...	2	0
பத்மசுந்தரன்	2	8	...	2	0
காதலின் கனி	2	8	...	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	...	1	12
ருக்மிணிகாந்தன்	2	0	...	1	12
சாம்ளநாதன்	2	0	...	1	12
தியாகக்கோடி	2	0	...	1	12
மங்களபாரதி	1	12	...	1	8
சண்பகவிஜயம்	1	12	...	1	8
கௌரீமுகுந்தன்	1	12	...	1	8
ஸாரமதி	1	8	...	1	4
சோதனையின் கொடுமை	1	4	...	1	0
பரிமளகேசவன்	1	4	...	1	0
உத்தமசீலன்	1	4	...	1	0
இன்பஜோதி	1	4	...	1	0
ராஜமோஹன்	1	4	...	1	0
அனாதைப்பெண்	1	0	...	0	14
சுகந்தபுஷ்பம்	1	0	...	0	14
கதம்பமாலை	0	14	...	0	12
கோபாலரத்னம்	0	14	...	0	12
புத்தியே புதையல்	0	10	...	0	8
பட்டமோ பட்டம்	0	8	...	0	6
நளினசேகரன்	0	8	...	0	6
வீரவஸந்தா	0	8	...	0	6
மூன்று வைரங்கள்	0	8	...	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	...	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	...	0	6
ஆனந்தஸாகர்	0	8	...	0	6
பக்ஷமாலிகா	0	6	...	...	
ஜெயஸஞ்ஜீவி	0	4	...	...	
சுகுணபூஷணம்	0	4	...	...	
அம்ருததாரா	0	4	...	...	

ரூ 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் முழு விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

அடுத்த இதழில் புதிய நாவல் ஆரம்பம்

"தியாகி"

சிறந்த தேசீய வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ராம—சடகோபன்.

"ஹரிஜன் மொழி பெயர்ப்புகள், சீர்திருத்தக் கட்டுரைகள், இன்பச் சிறு கதைகள், குறிப்புகள், வர்த்தமானங்கள் அடங்கியது. வருடச் சந்தா ரூ. 3-0-0

விலாசம்.—"தியாகி" ஆபீஸ்,

பரிக்கல். (தென்னாற்காடு ஜில்லா.)

இருந்தை. போஸ்டு

எது?

அஞ்சா நெஞ்சம் கொண்டு அரசியல் பித்தலாட்டக்காரர்களையும், அநியாயச் சட்டங்களையும், அநீதியையும், ஆணவத்தையும், கச்சை கட்டி எதிர்த்து நிற்கும் சிறந்த தேசீயப் பத்திரிகை. எது ? அதுதான்.

இந்திய வாலிபன்

ஒரு சிறந்த மாதப் பத்திரிகை, ரஸமான குறிப்புகள், இன்பச் சிறு கதைகள் கொண்டு திகழ்வது. வருடச் சந்தா ரூ 1-0-0. தனிப் பிரதி ஒரு அணா தான். ஏஜண்டுகள் தேவை.

ஆசிரியர். திரு. லோக சீதாராம்

"இந்திய வாலிபன்" ஆபீஸ். துறையூர் போஸ்டு

Trichy District,

விசேஷ அறிவிப்பு

நமது விளம்பர விகிதம்.

1 பக்கத்துக்கு ஒரு முறை	ரூ.	10	0	0
½ பக்கத்துக்கு ,,	,,	5	8	0
¼ பக்கத்துக்கு ,,	,,	3	0	0
கடைசி பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	10	0	0
முதற்பக்க உள்ளட்டைக்கு ,,	,,	12	0	0

விசேஷ விளம்பரங்கள்

சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் கதைக்குக் கீழ் 1 வரி விளம்பரச் செய்தி போட ஒரு முறை	ரூ.	0	8	0
ஒரே காலத்தில் 48 வரிகள் 1 சஞ்சிகையின் 1 வெளியீடு முழுவதிலும் போட ஒரு முறை	,,	20	0	0
கதை முடியும் அத்தியாயங்களின் இறுதியில் 1 பக்கத்தில் அநுமதிக்க ஒரு முறை	,,	15	0	0

நீண்ட கால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். ஸினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிரதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு நேரே விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஞானமுள்ள பெற்றோர் தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

சிறுவர் அறிவுக் கதிர்

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப் பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித் துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக் கொண்டது. மாதிரிக் காப்பிக்கு ஐந்து காலணு ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா : உள்நாடு 12 அணு. வெளி நாடு ரூ. 1—4—0

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ். ஈரோடு, தென்னிந்தியா.

WANTED

Candidates for Telegraph and Station Master class. Allowance Rs. 28. Uniform, passage and quarter free. Service essential. Rules and Entrance form on annas eight. **Director, Royal Telegraph and Ry, Duties College, Bombay. 14.**

Read:—

CINE ART REVIEW

(A Film & Music Fortnightly De Luxe)
For Latest News and unbiassed Views.
Published every alternate Saturday.
Annual Subscription Rs. 2-0-0. Single copy Anna ONE only (Postage Extra)

படியுங்கள்:—

ஆடல் பாடல்

ஓர் சிறந்த சினிமா சங்கீத வாரப் பத்திரிகை.
சிறந்த கட்டுரைகள், அழகிய வர்ணப் படங்கள் கொண்டது.
வருட சந்தா ரூ 2-8-0. தனிப் பிரதி 0-0-6 (தபால் செலவு பிரத்தியேகம்)

Wanted Agents in unrepresented areas.
232, Wall Tax Road, Park Town, Madras.

"லக்ஷ்மி"

ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.

எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்
மாதம் ஒரு முறை வெளி வரும்.

பெண்களும், குழந்தைகளும் ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 0 0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 8 0

மானேஜர், "லக்ஷ்மி" ஆபீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

செங்குந்த மித்ரன்

ஓர் உயரிய மாதாந்த வெளியீடு

இதில் சமுதாய சீர்திருத்தம், அரசியல் அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சுகாதாரம், வைத்தியம் பற்றிய குறிப்புகளும், அறிவு வளர்ச்சிக்கான பல உயரிய விஷயங்களும், மனதிற்கு இன்பமும் எழுச்சியும் தரத் தக்க கதைகள் நாவல்கள், உலக விநோதங்கள் ஆகியனவும் வெளியிடப்படுகின்றன.

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்,

வருட சந்தா

உள்நாடு ரூ. 1-8-0 வெளிநாடு ரூ 2-0-

மானேஜர், **செங்குந்த மித்திரன் ஆபீஸ்,**
பவழக்காரத் தெரு, சென்னை.

"வர்த்தக ஊழியன்"

வர்த்தக முன்னேற்றத்தைக் கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை

இந்தியா, இலங்கை, பினங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளி லுள்ள பிரபல வர்த்தகர்களாலும், மற்றும் பல பொது மக்களா லும் உலகத்தின் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு, பிரதி ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பல ஆயிரக் கணக்கான இதழ்களுடன் வெளி வருவது.

வர்த்தக ஊழியனில்

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத கட்டுரைகள், சாமான் களுக்கு ரெயில்வே கட்டணங்கள், வர்த்தகத் துணுக்குகள், அன் னிய நாட்டு வர்த்தக விஷயங்கள், தொழில் அபிவிருத்தி, வர்த்த கக்குறி வழக்கு முதலிய பலபல விஷயங்கள் வெளிவரும். மதிப் புரைக்காக பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

வர்த்தக ஊழியனில்

விளம்பரம் செய்வதினால் தக்க லாபத்தை அடையலாமென் பது திண்ணம். குறைந்த செலவில் நிறைந்த லாபத்தையடைய விரும்பினால், வர்த்தக ஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா உள் நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1-8-0

மானேஜர் "வர்த்தக ஊழியன்" திருச்சினாப்பள்ளி.

நீங்கள் இதைப் படித்ததுண்டா?

குறைந்த சந்தா ! நிறைந்த செய்தி !

182994

சித்தன்

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: டாக்டர் C. P. சாமி.

இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதா ரம், வைத்தியம் முதலிய விஷயங்களையும், அறிவு வளர்ச்சிக்கேது வான பல கட்டுரைகளையும், இன்பக் கதைகள், உலக அதிசயங்கள் பெரியாரின் ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண் மக்கள் பகுதி, நாடகம், சினிமா இன்னும் பல அரிய விஷயங்கள் பொதிந்து வெளிவருகிறது.

வருட சந்தா: உள் நாடு அணா 8. வெளி நாடு ரூ. 1

மானேஜர் "சித்தன்" பழனி. S. I.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய நாவல்கள்.

27½ ரூபாய்க்கு
32 நாவல்கள்.

“ஜகன்மோகினி” சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0
ராதாமணி	2	8	2	0
சாருலோசனா	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கொடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
இன்பஜோதி	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பக்ஷமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுணபூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Dev. Press, Madras

Jaganmohini (Oct. 1936) Regd. No. M. 2210.



வலிகள்

சுளுக்குகள்

Strains

அனாவசியமாக வலியினால் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து, வலியை சமனப்படுத்துவதை கவனியுங்கள்.

சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவுமில்லை.

அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்தும்.